க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1925௵ ஜூலை௴ | இதழ் 11.

தெய்வ வழிபாடு.

"வாயிலோ ரைந்து புலனெனும் வேடர் வந்தெனை யீர்த்துவெங் காமத்
தீயிலே வெதுப்பி யுயிரொடுந் தின்னச் சிந்தைநைந் துருகிமெய்ம் மறந்து
தாயிலாச் சேய்போ லலைந்தலைப் பட்டேன் றுயினுங் கருணையா முன்றுள்
நாயகமாகி யொளிர்விடு மணியே நாதனே ஞானவா ரிதியே."

பாண்டியநாடும், நாயக்க அரசர்களும்.

(1925௵ ஏப்ரல்௴ தொடர்ச்சி.)

7. திருமலை நாயக்கர்
(16-5—1659)

திருமலை நாயக்கர் அரசர் ஆனது முதல் பன்னிரண்டு வருடம்வரை திருச்சிராப்பள்ளியைத் தலைநகராக்கிக்கொண்டு, பாண்டிய நாட்டை ஆண்டுவந்தார். பதின்மூன்றாம் வருடத்திலிருந்து பாண்டியநாட்டை மதுரையிலிருந்தே ஆண்டுவந்தார். இவர் காலத்தில் இவரால் கட்டப்பட்ட கட்டடங்கள் இவரது பெருமையை நன்குவிளங்குகின்றது. இவைகள் விஜயநகரக் கட்டடங்களைப் பார்த்தே கட்டியதாகப் புலப்படுகின்றது. விஜயநகரத் தரசர்கள் எவ்வாறு சத்திரஞ்சாவடிகளைக் கட்டியும், கிணறுகுளங்களை வெட்டியும், நாட்டிற்கு நன்மைசெய்தார்களோ, அவ்விதமே மதுரையை ஆண்ட திருமலை நாய்க்கரும் செய்துமுடித்தார். இவரால் கட்டப்பட்ட கட்டடங்கள் "மஹால், புதுமண்டபம், தெப்பக்குளம், தமுக்கம், 96-தூணுக்குள்ள ராயர் கோபுரம்" முதலியன. இவற்றில் 'ராயர் கோபுரம்' போன்று, 64-கோபுரங்களுக்கு ஒரே முகூர்த்தத்தில் அஸ்திவாரம் போட்டாரெனப்படுகிறது. அவற்றில் ஒன்றேனும் முடிவுபெறாமல் பாதியில் நின்றுவிட்டன. ஸ்ரீரங்கத்திலிருக்கும் கோபுரமும் இவற்றிலொன்றே! இக்கட்டடங்களன்றி, ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர், அழகர் கோவில், திருப்பரங்குன்றம் முதலிய ஸ்தலங்களிலும் பல கட்டடங்கள் இவரால் கட்டப்பட்டன.

விஜயநகரம் சக்கரவர்த்தி மகமதியர் இம்சைக்கு உட்பட்டிருந்ததால், அவருடைய செல்வாக்கு சற்று குறைந்திருந்தது. அதனால் திருமலை நாய்க்கர் சுயேச்சையாய் இருக்கவெண்ணி, தம்முடைய முன்னோர்களைப் போல் விஜயநகரம் சக்கரவர்த்திக்கு உட்படாமல் நாட்டை ஆள ஆரம்பித்தனர். அதை முன்னிட்டு ஒரு போர் நடந்தது. விஜயநகர சக்கரவர்த்திக்கு உட்

பட்ட மைசூர் சாமராஜ உடையார், நாயக்கர் செய்கையை வெறுத்து, ஹாசரங்கி ராஜாவின் தலைமையின்கீழ் விஜயநகரத்தின் சார்பாக ஒரு சேனையை அனுப்பினார். அச்சேனை பல குன்றுகளைக் கடந்து, திருமலை நாயக்கர் நாடாகிய சத்திய மங்கலத்திலும், அதைச் சுற்றிய பாகங்களிலுந் தங்கி, பிறகு திண்டுக்கல் கோட்டையையும் எதிர்த்தது. அதைக் கேட்ட திருமலை நாயக்கர் தளவாய்-ராமப்பையர் தலைமையின் கீழ் சேனையை அனுப்பி சண்டைசெய்து தோற்கடித்துவிட்டார். இதுவே அவர் காலத்தில் ஏற்பட்ட முதல் சண்டை.

சக்கரவர்த்தி மகமதியர் தொல்லையொழிந்து பலப்பட்டவர், திருமலை நாயக்கர்மேல் எதிர்த்து செஞ்சி கோட்டையை முற்றுகையிட்டார். அவரை ஜெயிக்க தம்மாலாகாமல் கோலகொண்டா சுல்தானை உதவி வேண்டினார். சுல்தான் சக்கரவர்த்தியின் நாட்டை வடபக்கத்தில் எதிர்த்தான். அதைக் காக்க சக்கரவர்த்தி தென்னாட்டைவிட்டு தம் நாட்டிற்குச் சென்று கோலகொண்டா சுல்தானிடம் சண்டை செய்தார். கோலகொண்டா சுல்தான் எண்ணம் பலியாமையால் விஜயநகரச் சண்டையைவிட்டு, தென்னாடு திரும்பி, செஞ்சிகோட்டையைப் பிடித்துக்கொண்டு, மதுரையைத் தாக்கினான். நாயக்கர் பிஜப்பூர் சுல்தானிடம் உதவிவேண்டினார். பிஜப்பூர் சுல்தான், நாயக்கருக்கு உதவிசெய்வதாய் பாசாங்குசெய்து, கடைசியில் கோலகொண்டா சுல்தான் சேனையோடு சேர்ந்துகொண்டு, இருவருமாக மதுரையை எதிர்த்தார்கள். இச்சமயம் பெரியசேனையோடு விஜயநகர சக்கரவர்த்தி வந்து திருமலை நாயக்கருக்கு உதவினார். உதவியும் நாயக்கருக்கு ஜெயமுண்டாகவில்லை. என்றாலும் சக்கரவர்த்தி உதவிசெய்யாவிட்டால் மதுரை பாழாக்கப்படும். நாயக்கர் மிகுதியான பணத்தைக் கொடுத்தும், பிஜப்பூர் சுல்தானுக்குக் கப்பங்கட்டுவதாய் ஒப்புக்கொண்டும் மகமதியரை சமாதானப்படுத்தி அனுப்பினார். மைசூர் அரசர் சக்கரவர்த்திக்கு உபபலமாக விருப்பதால், அவரை தண்டிக்கும்படி திருமலை நாயக்கர் கோலகொண்டா சுல்தானை ஏவினார். அச்சுல்தான் மைசூரை கொள்ளைகொண்ட பிறகு, மதுரையை நிர்மூலமாக்கத் திரும்பினான். உடனே திருமலை நாயக்கர் அவனுக்கும் ஏராளமான பணத்தைக் கொடுத்து, சமாதானப்படுத்தி அனுப்பினார்

அக்காலத்தில் குட்டன் சேதுபதியின் குமாரர் சடையத்தேவர் என்பவர் சேது சமஸ்தானத்திற்கு தலைமைபெற்றுள்ளார். இவர் திருமலை நாயக்கருக்குத் தோப்பா பணம் கட்டாமலும், மதியாமலுமிருந்து வந்தார். அதை திருமலை நாயக்கர் கேள்வியுற்று தாக்கீதே அனுப்பினார். அவர் தாக்கீதை அசட்டைசெய்து, வந்தவனை அடித்துத் துரத்தினார். அதனால் அரசர் கோபங்கொண்டு, சில சேனையைத் திரட்டி, அதற்கு தளவாய்-ராமப்பையரைத் தலைமையாக்கி சண்டைக்கனுப்பினார். அவர் சடையத்தேவரோடு சண்டைசெய்து சடையத்தேவரை கைதியாக்கி மதுரைக்குக் கொண்டுவந்தார். அங்கே அவனுக்குக் கால்விலங்கிட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டது.

இது நடந்த சில காலத்திற்குப் பிறகு, ராமேஸ்வரம் போகும் வழியில் திருடர்பயம் ஏற்பட்டுவிட்டது. அதைக்கண்ட வைராக்கிகளும், சன்னியாசிகளும் திருமலை நாயக்கரிடம் வந்து திருடர் பயத்தைத் தெரிவித்து, சேதுபதியை விடும்படிக் கேட்டுக்கொண்டார்கள். அரசன் சந்தோஷங்கொண்டு சடையத்தேவனுக்கு புத்திமதி சொல்லி சில எனுமொடு விடுதலை செய்தான். இச்சடையத்தேவனுக்கு ஆண் சந்ததியில்லாமையால், இவனுக்குப் பிறகு, இவனது மகளின் புருஷன் ரகுநாததேவன் பட்டத்துக்கு வந்து, பட்டுக்கோட்டையிலிருந்து, மன்னார் கோயில் வரைக்கும் அதிகாரத்தைச் செலுத்திவந்தான்.

சிலகாலத்திற்குப் பிறகு மைசூர் மன்னர் தம்மேல் மகமதியரை ஏவி நாயக்கரை பெரியசேனைகொண்டெதிர்த்தார். நாயக்கருக்கு மைசூர் சேனையை எதிர்க்க சாத்தியமாகாததமையால், தளவாய் சேதுபதியை ஏவினார். தளவாய் சேதுபதி ரகுநாததேவனால் மைசூர் சேனை முறியடிக்கப்பட்டது. அதைக்கண்ட திருமலை நாயக்கர் சந்தோஷங் கொண்டு ரகுநாததேவனுக்கு, திருமலை சேதுபதி யென்னும் பட்டமும், தனது முத்துப் பல்லக்கும், திருச்சுழி, திருப்பூவணம், பள்ளிக்கூடம் என்ற ஊர்களும், அநேக விருதுகளும் கொடுத்தனுப்பினார். இக்காலத்திலிருந்தே ராமநாதபுரம் ஒரு தனித்த அரசாக நின்று, ராமநாதபுரத்தில் கற்கோட்டையுங் கட்டப்பட்டது. சடையத்தேவன் இறந்ததும் தம்பி என்பவன் தாமே சேதுவுக்கு சரியான வார்சு என்று சொல்லி, நாடு தன்னைச் சேர வேண்டுமென்று திருமலை நாயக்கரிடம் முறையிட்டான். நாயக்கர் தம்பியை சேதுபதியாக்கினார். தம்பி சேதுபதியான நாளிலிருந்து, சேதுநாட்டில் கொலையுங் களவுங் குடிகொண்டதோடு, இராமேஸ்வர யாத்திரியர்களுக்கு வழியில் கஷ்டமும் உண்டாயினது. அவற்றைக் கேள்விப்பட்ட திருமலை நாயக்கர் பழையபடி ரகுநாததேவனையே சேதுபதியாக்கினார். அன்றுமுதல் சேதுநாடு சமாதானமாயிருந்தது.

இவர்காலத்தில் பல நன்மைகளும், பல கஷ்டங்களும் ஏற்பட்டனவாயினும் சண்டை சண்டையென்ற ஏக்கம் குடிகள் மனதில் சதா குடிகொண்

டிருந்தது. அவ்வளவும் இவரால் வைத்துக்கொண்ட வேலையே! இச்சண்டைகளை 72-காவல்காரரை ஏற்படுத்திக்கொண்டு, தம்மாலானவரைக்கும் அடக்கி வந்தனர். திருமலை நாய்க்கருடைய ஆட்சி கி. பி. 1659-ம வருடத்தோடு முடிவடைந்தது. 36-வருஷம் ஆட்சிபுரிந்தார்.

பின்னைப்பெருமாள் ஐயங்காரும், குமரகுருபரஸ்வாமிகளும் இவரால்ஆதரிக்கப்பட்ட,இவர்காலத்திருந்தவர்கள்.

இவர்காலத்தில் மதுரையில் பலர் கிறிஸ்தவர்களாகிடதோடு, மரியாள் கோயிலுங் கட்டப்பட்டது.

(இன்னும் வரும்.) பத்திராதிபர்.

செய்கடனும், சுகானுபவமும்.

(S)

உலகத்தில் மனிதர்கள் செய்யும் நானாவிதமான செய்கைகளுக்கும் காரணம் அவரவருடைய எண்ணங்களேயாம். அவற்றுள் நல்லெண்ணங்களால் உண்டாகின்றவை நல்ல செய்கைகள். நல்லெண்ணமாவது, தருமத்தையே மேலாகக் கருதி உண்டாகின்ற எண்ணம். இந்த தருமபுத்தி ஒவ்வொருவருக்கும் சுபாவத்திலேயே பிறந்து, அநியாயமான செய்கைகளை ஒருபோதும் செய்யாதபடி எப்போதும் எச்சரித்துக்கொண்டேயிருப்பதாம். இந்த தருமபுத்தியைத்தான் மனச்சாக்ஷி என்று சொல்வது.

இம்மனச்சாக்ஷி ஒருவனை எச்சரிப்பது மாத்திரமேயல்ல; அவனுக்குக் கட்டளையிடுகின்றது. கண்ணானது கறுப்புக்கும் வெளுப்புக்குமுள்ள வேற்றுமையை விளக்குவதுபோல், மனச்சாக்ஷி கேவலம் நியாயமான செய்கைக்கும் அநியாயமான செய்கைக்குமுள்ள வேற்றுமையைமாத்திரமே விளக்குவதன்று. மேலும் அது நம்மைச் சும்மா எச்சரிப்பதுமாத்திரமேயல்ல, எதைச்செய்வதென்று ஆலோசிக்கும்படி செய்கிறது. மனச்சாக்ஷி கேவலம் குணதோஷங்களை மாத்திரமே எடுத்துச் சொல்வதன்று; இன்னதைச் செய் என்று கட்டளையிடுவது. அது பேசும்பொழுதெல்லாம் அதிகாரத்துடனே பேசுகின்றது. இது சரியான காரியமென்று சொல்லும் பொழுதெல்லாம், "நீ இது செய்யத்தக்கதாகையால், செய்தே தீரவேண்டும்" என்று கூடவே கட்டளையுமிடுகின்றது; இது பிசகான காரியமென்று சொல்லும்பொழுதெல்லாம், "இது நீ செய்யத்தகாததாகையால் செய்யவேண்டாம்" என்றும் மறுக்கின்றது.

'வேண்டும், வேண்டாம்; தக்கது, தகாது' என்பவைகளே மனச்சாக்ஷி செய்யும் கட்டளைகளாம். நாம் அனுசரிக்கத்தக்க நல்ல அபிப்பிராயங்களல்ல, நல்ல ஆலோசனைகளுமல்ல, அது நமக்குச் சொல்வது; பின் என்னவெனில், நாம் அவசியம் கீழ்ப்படியவேண்டிய கட்டளைகளேயாம். இக்கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமற் போனால், நாம் செய்யும் செய்கை பலரும் காண வெளிக்குக் குற்றமாவதுமன்றி, நம் மனத்துள் நாம் எப்பொழுதும் பச்சாத்தாபப்படும்படியாகும்; பச்சாத்தாபமாவது சாதாரணமான விசனமல்ல; அதைப்பார்க்கிலும் கொடிய துன்பம், வேறொன்றுமில்லை, மனோவியாதியுமாம். இந்த மனோவியாதியானது, நாம் செய்யவேண்டிய காரியத்தைச் செய்யாமற்போனோமென்றும், செய்யத்தகாததைச் செய்தோமென்றும் நாம் ஒப்புக்கொள்ளும்படியாகவும் நிர்ப்பந்திக்கின்றது. அப்படியல்லாமல் நாம் மனச்சாக்ஷியின் கட்டளைக்குக் கீழ்ப்படிவோமாயின், செய்யும் செய்கை வெளிக்கு நற்செய்கையாகும்; நம்மனமும் எப்போதும் சுகமுற்றிருக்கும். இத்தன்மையான நற்செய்கைகளைச் செய்வதே செய்கடன் அல்லது கடமையெனப்படும்.

செய்யவேண்டியது எதுவோ அதைச் செய்வதே கடமை. ஆதலால் கடமையானது முக்கியமாக மனச்சாக்ஷியையே பற்றியிருக்கின்றது. கடமையின் மூலமாகவே மனச்சாக்ஷியின் செய்கைகள் வெளியாகின்றன. செய்யவேண்டியது இன்னதென்று மனச்சாக்ஷி சொல்லும்போது, செய்தே தீரவேண்டுமென்று கடமை நிர்ப்பந்திக்கின்றது. ஏதேது செய்யவேண்டி

யதோ, அதெல்லாம் செய்யக்கூடியதேயாம். செய்ய வேண்டுமென்கிற எண்ணமும், செய்யக்கூடுமென்கிற எண்ணமும், செய்ய இஷ்டப்படுவதும் முறையே கடமையில் செலுத்துகிறபடிகளாம். எப்படியெனில், எவ்விதத்திலாயினும் நான் சத்தியசந்தனாயிருக்க வேண்டுமென்று கருதுகிறவனுக்கு, எனக்கு இஷ்டமிருந்தால் சத்தியசந்தனாயிருக்க என்னால் கூடுமென்றும், சத்தியசந்தனாயிருப்பது என் கடமையாகையால் அப்படியிருக்க எனக்கு இஷ்டந்தான் என்றும், நினைப்புகள் உடனே உண்டாகின்றனவல்லவா? இவ்விதமாகக் கடமை மனச்சாக்ஷியையே மூலாதாரமாகக் கொண்டிருந்தாலும், அதனுடன் சேர்ந்தவை இன்னும் பலவுண்டு. அவை உதாரகுணம், ஊக்கம், விடாமுயற்சி, பொறுமை, கீழ்ப்படிதல் முதலியவையாம். மனத்தினாலாயினும், சொல்லினாலாயினும், செய்கையினாலாயினும், நாம் பிறர்க்காயினும், பிறர் நமக்காயினும் எவைகளைச் செய்ய உரிமைப்பட்டிருக்கிறோமோ, அவையாவும் கடமையின் ராஜ்யத்தில் சேர்ந்தவைகளேயாம்.

கடமையின் வகைகள்: ஆதலால் அந்தந்த இடங்களுக்கும் நிலைமைகளுக்கும் தக்கபடி கடமைகள் பலவகை. சில கடமைகள் பலருக்கும் பொதுவாகவே யிருக்கின்றன; அதன் கட்டளைகளை மீறவாயினும், அதன் எல்லைக்கு அப்பால் ஓடித் தப்பித்துக்கொள்ளலாயினும் ஒருவராலும் கூடாது. மகன், மகள், சகோதரன், சகோதரி, தாய், தந்தை, உபாத்தியாயன், மாணாக்கன், யஜமானன், ஊழியன், அரசன், குடிகள் ஆகிய யாவருக்கும் தனித்தனியே சில உத்தரவாதமான செய்கைகள் ஏற்பட்டிருக்கின்றன; அவைகளை அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கடமைகளாகப் பாராட்டி வரக்கடவர்கள். இவைகளன்றியும் எவர்க்காயினும் எதிர்பாராத சிற்சிலகாரியம் எக்காலத்திலும் கடமையாகச் சம்பவிப்பதுண்டு; இந்தக் கடமைகளுக்கு பொறுமையும் தைரியமும் நம்பிக்கையும் முக்கியமாகவேண்டும். இந்தக் கடமை தனக்குரிய கடனென்றும், பிறர்க்குரிய கடனென்றும், வைதிகக் கடனென்றும் மூன்று வகையாயிருக்கும். ஆனால் எல்லாக்கடமைகளும் பிறருடன் சம்பந்தப்பட்டவைகளே; எல்லாம் வைதிகத்துடன் சம்பந்தப்பட்டவையென்றும் சொல்லலாம்.

கடமைகளைச் செய்யும் விஷயத்தில் சிரத்தை அல்லது அகப்பற்று முக்கியமாயிருக்க வேண்டும். கடமைகளாவன, கேவலம் செய்கைகளுமல்ல; கேவலம் விதிகளுமல்ல; கேவலம் கட்டளைகளுமல்ல. அந்தச்செய்கைகளைப் பக்திச் சிரத்தையுடனும் விசுவாசத்துடனும் செய்தாலன்றிப் பயனில்லை; விதிகளையும் விசுவாசத்துடன் அனுசரிக்கவேண்டும்; கட்டளைகளைச் சிரமேற்கொண்டு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். கடமைகளுக்குக் கீழ்ப்படிந்து ஒழுகுகிறவிஷயத்தில், எப்படிப்பட்ட செய்கையானாலும் மனங்கலங்காமல் மகிழ்ச்சியுடனே செய்யவேண்டும் என்கிற மிகுந்த விருப்பமும், அதனால் வினையும் பெருமையைச் சிறிதும் வேண்டாத வணக்கமும், கடமைகளை எப்பொழுதும் வருத்தமாகக் கொள்ளாமல் ஒரு வினோதமாகவே கொள்ளவேண்டுமென்கிற மனவுறுதியும் முக்கியமாகவேண்டும்.

செய்கடமைக்கு இடையூறுகள்: இவ்விதமான கருத்துகள் இல்லாமற்போனால், அதைச் செய்வதில் உற்சாகமுண்டாவதில்லை; உற்சாகமில்லாவிடின் இடையூறுகள் தாமே வந்து நுழைகின்றன. இடையூறுகளுக்கு உரிய பல காரணங்களுள் உடம்பு வணங்காத்தனம், அலக்ஷியம், பிடிமானமில்லாமை, அடங்காமை, விருப்பமின்மை முதலியன முக்கியமானவைகளாம். இவைகளுக்கெல்லாம் முதற்காரணம் தனவிச்சையும் சுகானுபவத்திலுள்ள விருப்பமுமேயன்றி வேறல்ல. கடமையைச் செய்வதிலுள்ள விருப்பத்திலும் சுகானுபவத்திலுள்ள விருப்பம் எப்போது மேற்படுகிறதோ, அப்பொழுது கடமையினிடத்தை அது கைக்கொள்ள விரும்புகிறது. உடனே கடமையில் உபேக்ஷையுண்டாகி அலக்ஷியம் மேலிடுகிறது. ஆயின் சுகானுபவத்தை ஒருபோதும் விரும்பவே கூடாதோ என்பீர்களோ? விரும்பலாம்

தடையில்லை; ஆனால் அதற்குச் சில ஏற்பாடுகளுண்டு.

செய்கடன் முன்னும் சுகானுபவம் பின்னுமாயிருக்கவேண்டும். முதலில் கடமைகளை செய்து முடித்தபிறகுதான் சுகானுபவத்தை விரும்புவது நியாயம்; அப்பொழுது அது உறுதியாகவேயிருக்கும். பூர்ணமாயும் அனுபவிக்கலாம். கடமையைச் சீராகச் செய்து முடித்து, அதற்கு வெகுமதியாக வரும் ஆனந்தத்திற்கு ஈடான ஆனந்தம் வேறில்லை. செய்கடனும் சுகானுபவமும் கூடவேபோகலாம், தடையில்லை. ஒருகால் அது கூடாதபக்ஷத்தில் செய்கடனே முற்படச் செல்லவேண்டும். அது முன்சென்றால் அதன்பயனாகச் சௌக்கியம், சுகானுபவம், விராமம், விநோதம் முதலியவைகள் தாமே வந்து சேரும். நாம் அவற்றைத் தேடவேண்டுவதில்லை. அப்படியன்றி இந்த வரிசைமாறிச் சுகானுபவம் முற்பட்டால், அப்பொழுது கடமையினிடத்துள்ள சிரத்தை போய்விடும். பிறகு கடமைகளைச் செய்வதற்கு எப்பொழுதும் ஓய்ச்சல்தான். எப்பொழுதும் அநுகூலப்படாமைதான், எப்பொழுதும் வெல்லக்கூடாத சங்கடங்கள்தான். ஒரு சமயத்தில் ஏதேனும் ஒரு கடினமான கடமையைச் செய்துமுடித்தால் அப்பொழுது ஒரு பெரியகோட்டையைப் பிடித்ததாக நினைக்கும்படியாகிறது.

நாம் செய்யவேண்டிய கடமைகளெல்லாம் கடவுளின் கட்டளைகளேயன்றி வேறல்ல. மதியும் விதியும் அவருடையவையல்லவா:—

“ஆழாழிகரையின்றி நிற்கவிலையோ கொடிய
வாலமமுதாக விலையோ
அக்கடலின்மீதுவட வனல்நிற்கவிலையோ
வந்தரத் தகிலகோடி
தாழாமல் நிலைநிற்கவில்லையோ மேருவும்
தனுவாக வளையவிலையோ
சப்தமேகங்களும் வச்ரதரனாணையில்
சஞ்சரித்திட வில்லையோ”

என்று தாயுமானவரும் பாடியிருக்கிறார். ஆகையால் அக்கடவுளை நம்பி அருட்செல்வம் யாருக்கும் உண்டென்று செய்கடனை நாம் அன்புடன் ஆதரித்து நடந்தால் அது நமக்கு எல்லா நன்மைகளையும் விளைவிக்கும். ஆதலால் கடமைகளை ஒருபோதும் கைசோர விடலாகாது. ‘செய்கடன் முன்னே சுகானுபவம் பின்னே’ என்பதை உள்ளத்தில் உறுதியாக வைத்து நடப்பவர்களுக்கு ஒருகாலும் இழிவுண்டாவதில்லை.

இதற்குச் சில திருஷ்டாந்தங்களை எடுத்துக் காட்டுவோம்:—

முந்நூறு வருஷங்களுக்கு முன்னே ஐரோப்பாவில் ஒரு நகரத்தில் பெரிய கொள்ளைநோய் ஒன்று உண்டாயிற்று. அவ்விடத்து மதபோதகராயிருந்த ஒருவர் அக்கொள்ளை நோயினால் துன்புறும் பிரஜைகளைப் பார்க்கப்போகப் புறப்பட்டார்; அப்பொழுது அவ்விடம்போனால் அபாயம் நேரிடுமென்று சொல்லிப் பலர் அவரைத் தடுத்தார்கள். அதற்குச் சிறிதும் செவிகொடாமல் அவர் நமது பிராணனையாவது கொடுத்து ஜனங்களைக்காப்பது நமது கடமையாயிற்றே இந்தச் சமயத்திலே போகாமலிருக்கலாமா என்று சொல்லி, உடனே புறப்பட்டுச் சென்று நான்குமாதகாலம் அங்கேயேயிருந்து, அந்நோயாளிகளுடன் பாடுபட்டார். அந்தக் கொள்ளைநோய் அவ்விடம் விட்டு நீங்குமளவும் அவர் அவ்விடத்திலேயே யிருந்தார். இந்தப் போதகர் இதுவன்றி இன்னும் அருமையான வேறு கடமைகளையும் செய்திருக்கிறார்.

நூறுவருஷத்திற்கு முன்னே ஜர்மனிதேசத்தில் ஒரு பண்டிதர் அந்நாட்டாருக்கு நல்ல விஷயங்கள் தெரியவேண்டுமென்று சிறந்த புஸ்தகங்கள் அச்சிட்டு விற்றுக்கொண்டிருந்தார். நெபோலியன் என்பவன் அத்தேசத்தின்மேல் படையெடுத்தபோது, அவன் புஸ்தகங்களை ஒருவரும் விற்கக்கூடாதென்று நிர்ப்பந்தம் செய்து அந்தப் பண்டிதருடைய புஸ்தகங்களையெல்லாம் கொள்ளையிட்டு அவருக்குக் கொடியகஷ்டமுண்டாக்கினான். அப்பொழுது அவர் இங்கிலாந்துக்கு ஓடிப்போனால் சுதந்திரமான அத்தேசத்தில் அவர்க்குச் சுகமான ஜீவனம் கிடைக்குமென்றும், அவருடைய வர்த்தகத்தையும் கைவிடாமல் நடத்திக்கொள்வதற்கு வழி உண்டாகுமென்றும் வரச்சொல்லி ஒரு

வர் அழைத்தார். ஆயினும் அவர் தனக்கு என்னநேர்ந்தாலும் தன் தேசத்தாரை விட்டுத் தான் போவதில்லையென்று உறுதிசெய்துகொண்டு அங்கேயே தன்னூராருக்கு ஆதாரவாயிருந்தார்.

அவருடைய மனையாட்டியும் மனவுறுதியில் அவருக்குக் குறைந்திருக்கவில்லை. தன் குழந்தைகுட்டிகளையெல்லாம் அழைத்துக்கொண்டு அப்பட்டணத்தினின்றும் ஒளிந்துகொள்வதற்கு ஓடினாள். அந்தப் புருஷனோ ஓடிப்போன ஜனங்களுக்குப் பொருள் உணவு உடைகளைக் கொண்டுபோய்த் தேடிக்கொடுத்துக் காப்பாற்றிவரும் அபாயமான காரியத்தை மேற்போட்டுக்கொண்டார். பெண்சாதி பிள்ளைகளைக்கூட ரகசியமாகப்போய் பார்த்துவருவது அருமையாயிருந்தது. அந்தச் சமயத்தில் அவர் மனையாட்டி வெகுதைரியமாய் "எனக்காக நீர் விசாரப்படவேண்டாம், சுவாமி என்னைக் காப்பாற்றுவார், உமது கடமையை நீர் கைவிடாமல் நடத்தலாம்" என்று தன் புருஷனுக்குக் கடிதமெழுதினாள்.

மேலிரண்டும் அன்னியதேசத்துத் திருஷ்டாந்தங்கள். நமது இராணியாருடைய நாடாகிய இங்கிலாந்தில் செய்கடனை பெரியதென்று நினைத்து நடந்தவர்கள் பலருண்டு. 1805ல் ஆங்கிலேயருடைய போர்க்கப்பல்களும் பிரெஞ்சு தேசத்தாருடைய போர்க்கப்பல்களும் த்ரெபால்கர் என்னும் கடலோரத்துப் பிராந்தத்தில் எதிர்ப்பட்டு கோரயுத்தம் நடக்கிற தருணத்தில் நெல்ஸன் என்னும் தளகர்த்தர் "பிரதிமனுஷியனும் அவனவனது கடமைமையைச் செய்வானென்று இங்கிலாந்துதேசம் எதிர்பார்த்திருக்கின்றது" என்னும் குறிப்பு வாக்கியத்தை ஞாபகப்படுத்தும் கொடியைத் தானிருந்த தலைக்கப்பலின் கொடிமரத்தில் கட்டிக் கப்பற்சேனை வீரர்களுக்கு மனவெழுச்சி உண்டாகச்செய்தார். அந்தக் கொடியைப் பார்த்த உடனே மற்றக் கப்பல்மீது இருந்த இங்கிலாந்து போர்வீரர்கள் ஜயகோலாகலத்துடன் முனைந்து சண்டைசெய்யத் தொடங்கி.

அந்த உக்ரச்சண்டையில் முதலில் மாண்டுபோனவர்களில் தளகர்த்தரான நெல்ஸன் என்பவரும் ஒருவராயிருந்தாலும் அந்தக் கப்பற்போரில் தாம் நினைத்தபடித் தமது தளம் வெற்றிபெற்றது என்னும் சமாசாரம் கேட்கிற வரையில் காயம் பட்டவர் பிழைத்திருந்தபடியால் அவர் 'எனக்கு இப்பொழுது திருப்தியாகிவிட்டது. என் கடமையைச் செய்து முடித்தேன். கடவுளுக்கு நன்றி செலுத்துகிறேன்' என்று சொல்லி மனக்குறையில்லாமல் பிராணனைவிட்டார்.

மற்றொரு சேனைவீரரான உவெல்லிங்டன் என்னும் பிரபு ஐம்பதுவருஷத்திற்கு முன்னே செய்கடனை பெரிதென்பதற்கு திருஷ்டாந்தமாக விளங்கினார். அவர் அபாயமென்று பின்னிடையாமல் முன்னணியிலிருந்து போர் செய்தனார். அவருக்குக் கீர்த்தி பரிசு பிரதிஷ்டைகளையும் பெறவேண்டுமென்னும் ஆசை சிறிதுமில்லை. அவர் பொறாமை இன்னதென்று அறியார். இலங்கா யுத்தத்திற்குப் படையுடன் போவீரா என்று அரசன் கேட்டபோது "மகாராஜாவின் இஷ்டப்படி. இதோ நடக்கச் சித்தமாயிருக்கிறேன். தாங்கள் கட்டளையளித்தால் தாசன் அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பேன்" என்று சொன்ன மகா சூராலயபால் செய்கடன் தவறாத திடபக்தியுடைய சேனாபதி இவர்தானென்று இவருக்கு 'இரும்புபோன்ற வீரமார்த்தாண்டன்' என்னும் சிறப்புப்பெயரிட்டார்கள்.

நமது தேசத்திலும் இவ்விதமாகச் செய்கடனைக் கைவிடாமல் செலுத்தியதற்குத் திருஷ்டாந்தம் பல உண்டு. பாரதப்போரில் அர்ச்சுனன் மகனான அபிமன்யு தன் தகப்பன் அப்புறம் சென்றிருந்தகாலத்தில் மிகவும் பாலனாயிருந்தும் தானே போர்செய்யப் புறப்பட்டு, இன்று எதிரிகளில் ஒரு சிறந்த வீரனை வதைக்கிறேன் என்று துரியோதனனது சேனாபதியான துரோணாசாரியார் பிரமாணம் செய்து கொடுத்திருப்பது நன்றாய்த் தெரிந்திருந்தும் குழந்தாய்! பாலகா!! இன்று நீ போர்க்கு வரவேண்டாம், அப்புறம் போய்விடு நான் கோரமான ஒரு சபதம் பண்ணியிருக்கிறேன் என்று

துரோணாசாரியர் பலவிதமாக நற்புத்திசொல்லியும் கேளாமல், பராக்கிரமத்திற்குப் பேர்போன தன் குலத்திற்கு இழிவு வரலாகாதென்று தன் கடமையையே பெரிதாகவும், உயிரைத் துரும்பாகவும் நினைத்துப் பகைவருடன் கோரயுத்தஞ் செய்தான். இவ்விதமாய் அரசர்க்குரிய கடமை, குடிகளுக்குரிய கடமை, தந்தைக்குரிய கடமை, மகற்குரிய கடமை, தனக்குரிய கடமை, குலத்திற்குரிய கடமை, பிறர்க்குரிய கடமை முதலான பலவகைச் செய்கடனைச் செலுத்தியதற்கும் திருஷ்டாந்தங்கள் இராமாயணம் பாரதம் முதலான இத்தேசத்துச் சரித்திர புத்தகங்களில் நூற்றுக்கணக்காகக் காணலாம்.

ஸ்திரீ வைத்தியர்கள்.

இப்போது நமது தேசத்தில் ஸ்திரீ வைத்தியர்களில்லாமலிருப்பது முக்கியமான குறைவுகளில் ஒன்று என பலர் நினைக்கின்றனர். புருஷவைத்தியர்கள் போதாதா, ஸ்திரீவைத்தியர்கள் ஏன், அவர்களிடத்தில் என்ன விசேஷமிருக்கிறது என்றாலோ, அவர்களிடத்தில் நிசமும் பெண்மையே விசேஷம். பிறருடைய சுகதுக்கங்களை நமது சொந்த சுகதுக்கம் போல் உணர்வதை உடனுணர்ச்சி யென்றாவது, அனுதாபமென்றாவது சொல்லலாம். இப்படிப்பட்ட பரிதாபம் நோயாளிகளிடத்தில் வைத்தியர்களுக்கு அவசியம் இருக்கவேண்டியது. சரீர ஆரோக்கிய முள்ளவர்களுக்கும், சுகமாயிருப்பவர்களுக்கும், நற்குண முள்ளவர்களுக்கும் சந்துஷ்டி யுள்ளவர்களுக்கும், ஒருவருடைய அனுதாபமும் தயவும் தாட்சண்யமும் வேண்டாம். அப்படியின்றி நோயினால் வருந்துபவர்களுக்கும், துக்கமே குடிகொண்டிருப்பவர்களுக்கும், துஷ்டர்களுக்கும், கதியற்றவர்களுக்கும், பிறருடைய அனுதாபம் இல்லாவிட்டால் அவர்களுக்கு கிஞ்சித்தாவது அனுகூலம் பிறக்க இடமே யில்லாமற்போய், மென்மேலும் கெட்டுப்போவார்கள். ஆகையால் ஒரு ஸ்திரீயினுடைய கஷ்ட நிஷ்டூரங்களைக் கண்டு பரிதபிப்பது மற்றொரு ஸ்திரீயினாலாகவேண்டிய காரியமேயல்லது புருஷனால் முடியாத காரியம். புருஷனுக்கு ஸ்திரீயைப் பற்றிச் சாதாரணமாக உள்ள ஒரு உணர்ச்சியானது சிலசமயங்களில் ஒருதுளி பிசகிவிட்டால் நன்மைமட்டும் விளையாமற் போவதுமன்றி உண்மையாக தீமையும் நேரிடும், ஆகையால் ஸ்திரீகளிடத்தில் புருஷர்களுக்குப் பொதுவாக ஒரு பரிதாபம் உண்டென்றாலும், அது அவ்வளவு நுட்பமானதல்ல. சிறைச்சாலைகளிலும் சிறுமிகளைச் சீர்திருத்தும் சாலைகளிலும் அடைபடும் ஸ்திரீகளின் மேற்பார்வையை புருஷர்களிடத்தில் ஒப்புவிப்பதினால் அவர்களை நல்வழியில் திருப்பிக் கொண்டுவர வேண்டுமென்கிற கருத்தானது வீணாய்ப் போய்விடுகிறது. வித்வானை வித்வானே யறிவானென்பதுபோல, ஸ்திரீயை ஸ்திரீயே யறிவாளென்பதற்குச் சந்தேகமில்லை. சன்மார்க்கந் தவறிப்போன ஒரு பெண்ணானவள், வயது முதிர்ந்தவளாயும் நிதானத்தோடும் கூடிய ஒரு ஸ்திரீ வைத்தியரிடத்தில் ஒப்புவிக்கப்பட்டால் அவளுக்கு எவ்வளவோ பயபக்தியும் விஸ்வாசமும், உண்டாகும்; அவ்வளவு பக்தியும் விஸ்வாசமும் புருஷவைத்தியனிடத்தில் உண்டாகமாட்டாது. ஸ்திரீயாக இருந்து செய்யக்கூடிய காரியத்தை புருஷன் எவ்வளவு சாமார்த்தியசாலியாயிருந்தாலும் செய்ய முடியாது. இயற்கையாகவே அமைந்திருக்கிற விஷயத்தை மாற்ற யாரால் சாத்தியப்படும்?

முற்காலத்தில் நமது தேசத்தில் பெண்கள் கல்வியிற் சிறந்தவர்களா யிருந்திருக்க வேண்டுமென்பதற்குப் போதுமான சாட்சியமிருந்தாலும் பிற்பாடு பலவித காரணங்களினால் அநேக வருஷகாலமாய்ப் பெண்கல்வியானது மங்கிப்போய் கடைசியாகப் பெண்களுக்குக் கல்வியே கூடாது என்று நினைக்கும்படியான காலம்

வந்துவிட்டன. இப்போது நம்முடைய பாக்கியத்தாற் பெற்றிருக்கிற ஆங்கிலேய துரைத்தனத்தின் எண்ணிறந்த நன்மைகளில் ஒன்றாக பெண்கல்வியும், மெல்ல மெல்லப் பரவிவருகிறது. ஞானமில்லாத மனிதன் மிருகத்துக்குச் சமானம்; அந்த ஞானமோ கல்வியினலல்லாமலுண்டாகாது: இப்படியிருக்கக் கல்வியென்னும் நாற்றமேயறியாத பெண்களாகிற மிருகங்களோடு கல்வியும் விவேகமும் உள்ள புருஷர்கள் கூடிவாழ்வது என்ன வாழ்க்கை. புருஷர்களும் பெண்களும் ஒரேவிதமான விவேகமுள்ளவர்களாயிருந்தால்தான் சுகவாழ்க்கை கூடியவரையில் இன்பமுள்ளதாயிருக்கும். நல்லவேளையாய் இந்த நியாயமானது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு பெண் கல்வியில் அக்கரையுண்டாயிருக்கிறது. இப்படிப் படித்தவரும் பெண்களில் சிலராவது வைத்திய சாஸ்திரத்தை அப்பியசிப்பார்களேயானல் அவர்களாலே நமது ஸ்திரீஜாதி முழுமையும் மிகுந்த நன்மையடையலாகும். இனிமேல் பெண் வைத்தியர்கள் தலைப்பட்டு இதுவரை கண்டுபிடியாத வைத்திய முறைகள் கண்டுபிடிக்க வேண்டுமென்பதில்லை; கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற முறைகளைச் சோதித்துச் சாரம் எடுக்கவேண்டுமென்பதுவுமில்லை; புத்தி கூர்மையினல் புதிது புதிதாகக் கற்பனை பண்ணவேண்டுமென்பதும் இல்லை. இப்படிப்பட்ட அதிசயமான காரியங்கள் பண்ணுவிடினும், உள்ளதைத் தெரிந்துகொண்டு வைத்தியோபசாரம் செய்வதாகிய தொழிலில் அவர்களால் ஆகவேண்டிய ஒத்தாசையானது இவ்வளவு அவ்வளவு என்று சொல்லி முடியாது.

சடகோபர் என்கிற நம்மாழ்வார்.

(T. பக்தவத்ஸலம், பி. ஏ., எம். பி. பி. ஐ; அவர்களால் செய்யப்பட்ட உபந்யாசம்.)

முள்ளும் சக்கரமும் முடுக்காய் செய்துக்கொண்டு கடியாரமும், வாட்சும் கண்ணியமாய்த் தம்மைத்தாமே சாவிகொடுத்துண்டாக்கிக்கொண்டனபோலும்! காரணமொன்றுமில்லாமலே கடிகாரமுண்டாய்விட்டது. சூரியன் தானுய்க் குதித்தான். நிலவும் அதுவேதோன்றிவிட்டது. நக்ஷத்திரங்கள்மினுக்கென்றெட்டிக்கொண்டன. தம்மைத்தாமே மிருகங்கள்தோன்றின. மீன்கள் குதித்தன. செடிகள் முளைத்தன. மனிதர்கள் வந்து மாநிலத்தில் தோன்றிப் பல்லிளித்துப் பரவசங் காட்டினர்கள். அணுராசிகள் தோன்றி ஆக்கிக்கொண்டது அற்புத உலகத்தை. மலைகள் எழும்பின கடல்கள் குமுறின காற்று வீசிற்று மழையும் பொழிந்தது. நீதி அநீதி யென்கிற எண்ணங்களும் சத்யம் அசத்யம் என்கிற பாகுபாடுகளும் ஜடவுலகத்தில் எப்படியோ முளைத்தேவிட்டன. கடவுளுமில்லை காரணமுமில்லை; பாவபுண்யத்தைத் நிறுத்துப் பலம்பலமாய்க் கணக்கிடலாகாது. ஆறுக்கு உழக்காய் அளந்தறிய முடியாது. ஒருவேளை அணுக்களோ நேர் நேராய்ச் சேர்வதாலே வந்தது உலகம் வாய்ந்தது பிரபஞ்சம் என்று எண்ணுத எண்ணமெல்லாம் பண்ணுத யோசனையெல்லாம் என்னென்னவோ நினைத்து ஏதேதோ செய்து அனர்த்தம் விளைத்து அனேகர் அருகதைற்றவராகிருர்கள். அந்தந்தோ விபரீதம்! அச்சச்சோ என்ன விநோதம்! மிருகத்தன்மையைக் கடந்து மனிதனுக்கும் மேலான நிலையை அடைந்தவர்களில் காட்டுமிராண்டிகளாயிருக்கும் கடைகெட்ட ஜாதியாரிலிருந்தும், நாகரீக வளர்ச்சியாலும் ஞானப் பெருக்கத்தாலும் உன்னத நிலையை உறுதியாயடைந்தவர்கள் வரைக்கும் உற்று நாம் சற்று யோசிக்கும்போது கடவுளுணர்ச்சி ஒவ்வொருவர் மனத்திலும் கட்டாயம் காண்கிறது என்று Psychology என்னும் மனேதத்துவ சாஸ்திர மஹாவல்லவர்கள் நிதானத்தோடே நிச்சயத்தைக் கூறுகிருர்கள். காட்டேரியிலிருந்து கற்பக விநாயகர் வரைக்கும் முனீஸ்வரனிலிருந்து முதுகந்த பிரான்வரைக்கும், எந்த உருவத்திலாயினும் அவர்கள் எந்தை பிரானை [illegible] பூசிக்கிருர்

கள். தந்தம் அறிவிற்கிசைந்தவாறு தாம் தாம் வணங்குகின்றார்கள். இந்த உணர்ச்சி எப்படி வந்தது. இந்த எண்ணம் எவ்வாறு விளைந்தது என்று எற்றவழியிற் கேட்கின்றார். Ethics என்னும் சாஸ்திர வித்தையில் சமர்த்தரான சாகஸ விஞ்ஞானிகள் Psychology என்னும் மனோதத்துவ சாஸ்திர மஹா மேதாவிகள்! யாவரொருவரும் கற்றுக்கொடாமலே எவரும் வந்து ஏற்றபடி போதினைசெய்யாமலே எப்படி வந்தது, எல்லாம் வல்ல கடவுளொன்றுண்டென்கிற எண்ணம் என்று விஞ்ஞான சாஸ்திரிகள் வினவுகின்றார்கள். உலகத் தோற்றமாகிய காரியத்தில் புத்தி நுட்பமும் விவேகப் பெருக்கமும் இருந்தே தீரவேண்டுமென்றும், அக்காரணம் மெய்ப்பொருளான சடப்பொருளாயிருத்தல் அசாத்தியமென்றும், அவர்கள் கூறுகின்றார்கள். Science சிறிது படித்தவுடனேயே சாமியில்லை என்று கூறும் சில்லறைப் படிப்பாளிகள் சிலரைத்தவிர, தத்துவ ஆராய்ச்சியில் தலைமுழுகியிருக்கிற உத்தம வித்துவான்கள் எத்தனையோ பெயர்கள் கடவுளொன்றுண்டென்பதை மறுக்க முடியாதென்று சமருகின்றனர்கள். சுருக்கமாகக் கூறுமிடத்து, கடவுளில்லையென்று சொல்லுமிந்த சாக்கருடைய கொள்கையாய்க் காண்கிறதேயன்றி, கடவுளொன்றுண்டென்னும் நம்பிக்கை வைத்து அதன்படி நடப்பது அவிவேகம் எனத் தோன்றவில்லை.

உலகை புணராது, உள்ளதை யோராது இக உலகத்தின் இன்பமே என்று முள்ள சாம்ராஜ்யமென்று கண்ணைமூடி மனதை மயக்கி ஆபாச இருட்டில் அவிவேகமான அந்தகாரத்தில் முன்யோசனை பின்யோசனை யில்லாது முரட்டுத்தனமாய்ப் பேசுவதே நிரீஸ்வரவாதமாகிற நாஸ்திகமென்று சொல்லப்படும்.

“கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன்
நற்றா டொழா ரெனின்”

என்னும் உண்மையை ஏற்றபடியறிந்து, இறைவனைத்தொழுது அவன் திருவருளைச் சிந்தனை செய்து தர்மவழியில் தக்கபடி நடப்பதே உத்தமமான ஆஸ்திக வழியாகிறது. அண்டாண்ட சராசரங்களையும் அந்தரத்திலே தொத்திய கனிபோலே பிரமாண்டத்தில் காணும் பேருமில்லாத பெரிய சிறிய உலகங்களையும் எல்லாவற்றையும் படைத்துக் காத்துத் துடைத்து மறைத்து மீண்டும் வெளிவித்து சிலந்திப்பூச்சி நூல்நூற்கும் சிங்கார விதமாகச் சகலலோகங்களையும் சகல ஆத்துமாக்களையும் சம்ரக்ஷிக்கிறவன் எவனோ அந்தகைய பரம்பொருள் ஆனந்தவாரிதி ஈடுமெடுப்பு மில்லாத எந்தை பெருமான் ஸர்வேஸ்வரன் ஒருவன் உண்டென்று சந்ததமும் சிந்தையில் நினைப்பதே சரியான காரியம்.

பக்தி செய்வதே.

உலகத்தில் பரமோன்னதமான நெறியாகும். பெரிய பெருமானைக் காட்டிலும் உலகத்தில் பெரியது யாதிருக்கின்றது? அவனை வழிபடுவதைக் காட்டிலும் அற்புதமான அறநெறி வேறியா திருக்கக்கூடும்? எந்தை தந்தை தந்தை தந்தை தம் முத்தப்பனெம்படிகால் தொடங்கி, வந்து வழிவழிபாட் செய்கின்றவர்களை வந்தித்துப் பூசித்து வாழ்த்திக் களிப்பதைவிட வண்மையான காரியம் உண்மையில் யாதிருக்கிறது.

ஐயனைப் பணிந்து பக்தி செய்வது அற்புதமான விரும்பத்தக்க காரியம்; அவன் பக்தர்களிடம் பக்தி செய்வது அதனினும் மேதக்க செயல்! பொதுவாக ஜீவர்களிடம் கருணைபாராட்டி, அவர்களை நல்லவழியில் ஆனந்தகரமாய்ச்செலுத்தி, அவர்கள் அறிவை வளரச்செய்து, அவர்கள் பக்தியைப் பழுக்கச்செய்து, அவர்கள்பால் ஆதரம் காட்டுவது ஆயிரம் விதக்காலகன்றாகிய தூயகடமையாகும். இகவாழ்க்கையி லொருவரிருப்பினும் பரவாழ்க்கையை மறவாது பரந்தாமனிடம் பக்திசெய்வதே பலவகைப்பட்ட நன்மைகளையும் சுலபத்தில் கொண்டுவந்து சேர்க்கும்! இதனாலே ஒவ்வொருவரும் லௌகிகத்தை மறக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. உலகநடைக்கு வேண்டிய பலவகை வியாபாரங்களிலும் மனமது சுழன்றபோதிலும் அலைந்து தினம் தினம் மயங்கித் தியங்கினபோதிலும், காரியத்தின்மீது கண்ணுயிருக்கவேண்டுமென்று சொல்லுகிறபடி சக

லத்திற்கும் காரணனாகிற பரம்பொருள்மீது பக்தியை நாட்டுவதில் சித்தம் நிலைக்கவேண்டும் இல்லாவிட்டால், கல்யாண சந்தடியில் தாலி கட்ட மறந்தவனைப்போலும், தமிழறியும் பெருமாளிடம் தர்க்கஞ்செய்து வெல்லவந்தவர்கள் ஆட்ட பாட்டங்களையும் வேடிக்கை விநோதங்களையும் நாடிப் பார்த்துக்கொண்டே தேடிவந்த காரியத்தை முற்றிலும்மறந்து முடிவில் விழித்ததுபோலும் உலகத்தில் நாம்பிறந்தது அதினும் மனிதராகிய மேன்மைப் பிறப்பை மேதினியிற் பெற்ற சுகிர்த விசேஷத்தைச் சுத்தமாயிழந்து, மேலடைய வேண்டிய நற்கதியைத் தீர இழந்தவர்களாவோம். மனிதஜன்ம மெடுத்து மாண்பான பக்தி செய்யாவிடின் மாட்டுக்கும் நமக்கும் வேற்றுமையே யில்லை! பக்தியூற்று நமது இதயத்தில் பக்குவமாய்ச் சுரக்காவிடின் நம் மனம் கருங் கற்பாறையாகிய நலம் பயவாத நிலைமையை யடையும். பளிங்கு மாளிகையிலே பவழப்பீடங்க ளிருத்தி நவரத்தினக் குவியல்களை நாற்புறமும் பரப்பி, பட்டும் சரிகையும் திட்டமாய்ப் பெருக்கி குபேரனு மஞ்சத்தக்க கோடிதனம் படைத்தவர்களேனும் பக்தியென்பது அவர்கள் நெஞ்சத்தைப் பண்படுத்தாவிடின், அக்கல்லினும் கடியநெஞ்சம் அவ்விரும்பினும் வலியமனம் ஒளியைமாத்திரம் பெறாது வலியைமாத்திரம் பெற்ற வைரவுள்ளம், மஹாபாதகங்களுக்கெல்லாம் மாதாவைப் போலாய் குடிக்கத்தண்ணீ ரகப்படாத கொடிய பாலைவனம்போலாய் கல்லும், முள்ளும், பொந்தும், புதரும், பாம்பும், புலியும், நாயும், நரியும், பேயும், பிசாசும் வாசஞ்செய்யும் பெரிய வனாந்தரம் போலாய் அந்தப் பக்தியில்லாத மனம் அந்த விவேகமில்லாத நெஞ்சம் கனிவென்பதேயில்லாத கடிய உள்ளம் பயன்படாததாய் பயங்கரமாய் விளங்கும். ஹா! அவன் செல்வம் அளப்பரிய தாயினும் அவன் வித்தைகளெல்லாம் அபரிமிதமா யிருந்தபோதிலும் அவன் துணைவரும், அவன் உறவினரும், அவன் நண்பரும் அவன்பால் ஊழியஞ் செய்வோரும் ஆயிரக் கணக்காய் அகில மெல்லாம் நிரம்பியிருந்தபோதிலும் அவன் மனத்தில் அகிலாண்டத்தைப் புரக்கும் அறவாழி யந்தணன்மீது அற்ப பக்தி அணுவளவேனும் காணாவிட்டால் அவன் செல்வம் அரைக் காசுக்கும் பயன்படாததாய் அவன் வித்தைகளெல்லாம் காருட வித்தை, செப்பிடுவித்தை, கண்கட்டி வித்தைகளாய் அவன் துணைவர் முதலானோரும் பின்னாலே பள்ளம் வெட்டி முன்னாலே போவாரைப் பின்னாலே யிழுப்போராய் யாதும் பயன்படாது ஏதும் விளங்காது போகும். யான் மறுபடியும் சொல்லுகிறேன்—பாவ னொருவனாயினும் கடவுளைப் பற்றிச் சிந்திப்பது கவைக்குதவாத காரியம் பக்தி யென்பது பைத்தியமாகுமேயன்றி, வேறொரு காரியத்திற்கும் யாதொரு பயனும் தாராது என்று மனத்தில் நினைத்து கேவலம் லௌகிகத்தில் மாத்திரம் கிளர்ச்சியுற்றிருப்பானாயின் அவனைப்போல் பாவஞ்செய்தவன் அகிலத்தில் கிடைக்கமாட்டான்; அவனைப்போல் துர்திஷ்டமுடையவனும் அவனைப்போல் பரலோக சாதனத்தைப் பற்றற மறந்தவனும் மேதக்க எண்ணங்கள் யாவுமே நிலைக்காத ஈனமனத்தோடே இவ்வுலகில் தோன்றுபவனும் எவனொருவனு மிருக்கமாட்டான். ஆகலால், பக்தியென்பதே பரம ஸ்ரேஷ்டமானது. பக்தியை உலகத்தில் பரிணமிக்கச் செய்து, பக்தியை மேலும் மேலும் பரிமளிக்கச் செய்து பரந்தாமனிடம் மனதைப் பக்குவமாய்த் திருப்பினவர்கள் திவ்யமங்களம் பொருந்திய தீரமான ஆழ்வார்கள்.

எந்த வெந்தக்காலத்தில் இந்தமேதினி யிடர்பட்டு நிற்குமோ அந்தவந்த காலத்தில் அவதரிப்போம் நாம் என்று வண்ணமுள்ள கீதையில் கண்ணபிரா னருளினன். மெஞ்ஞானம் பெருகி விஞ்ஞானம் விளையவும் அஞ்ஞானமாகிற அந்தகாரம் ஆகாசத்திற் பறந்து அதோகதியாகவும் ஆழ்வார்கள் பிறந்து நம்மையெல்லாம் வாழ்வார்களாக்கினார்கள். அவனே யாயினும் அடியரேயாயினும் தாம் இருள் தருமா ஞாலத்தில் மருளகற்ற வேண்டுமேயன்றி, மற்றவராலே அஃது சுத்தமாய் முடியாது. இதனையுணர்ந்த ஈசன்தானும் அவதரித்தான் தசவிதமாய்! அதனைவிட மேலென்று அவதரிக்கச்

செய்தான் தன் பரிஜனங்களையும்! மானைக்காட்டி மானைப்பிடிப்பது போலும் யானையைக் கொண்டு யானையைப் பழக்குவதைப்போலும் அடியரைக் கொண்டு அடியரைச் சேர்ப்பது அதிக உத்தமமென்று ஐயன் திருவுள்ளம்பற்ற அவதரித்தார் ஆழ்வாராதியர்கள்.

ஆழ்வார்கள் பதின்மர்! ஆண்டாளொருவர்!
மதுரகவியார் மற்றொருவர்!

இப்பன்னிருவருள், இற்றைநாள் திருவோலக்கங் கொண்டிருக்கும் ஆண்டாள் பாடல்கள் அழகும் அமைதியும் கனிவும் கம்பீரமும் மிகவுடையவை! ஆற்றின் போக்குப்போல் அமிர்தச் சொல்போக ஊற்றின் சுரப்புபோல் உன்னத எண்ணங்கள் ஆச்சர்யத்தை உண்டாக்கி ஆனந்தம் விளைக்கும்! மாதரசிகளில் பாவரசி ஆண்டாளைப்போல் அகிலத்தில் கிடையார்; கவித்திறத்திலும் கம்பர்க்கு ஒருபடியும் குறையாதவை ஆண்டாள் தம்முடைய அருமையான பாடல்கள். ஆண்டாள் பாடியது உபநிஷத்ஸாரம்; நம் சடகோபராகிய ஆழ்வார் பாடியது அருமறையின் ஸாரம்.

முன்னொருக்கால், வைணவத் திருக்கூட்டமொன்றின்கண் பத்துப் பதினைந்து நிமிஷமாயினும் ஸ்ரீ சடகோபர் வைபவத்தைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று என்னைக் கேட்டபோது என்னுடைய அறியாமையையும் விஷயத்தினுடைய அருமையையும் முன்னிட்டு, 'குருவியின் தலையில் பனங்காயைக் கட்டுவது போல், என் தலையில் சடகோபனைக் கட்டினீர்கள்' என்று விண்ணப்பித்துக் கொண்டேன். 'கட்டவேண்டுவது தானே' என்று அச்சபையின் அக்ராசனாதிபதியவர்களிடமிருந்தும், சபையின்கண் விஜயஞ்செய்திருந்த சாதுக்கள் பலரிடமிருந்தும் எதிரொலி பிறந்து அதிரச் செய்தது! அவர்களை நல்லவர்களாக்கிவிட்டீர்கள் நீங்கள்! A fool's bolt is soon shot அற்பனுடைய அறிவுக்கு மூன்று நிமிஷத்தில் ஹதம் வந்துவிடும்! முட்டாளுடைய செட்டிக்காரத்தனம் மூன்று நிமிஷத்திற்குமேல் முன்னுக்குச் செல்லாது இவ்வுண்மைகளை யறிந்தும் நீங்கள் என்னை இன்னும் ஏதோ சொல்லும்படி வாதாடினது குருவியின் தலையில் பனங்காயை கட்டுவதுபோலன்று குருவியின் தலையில் கோவர்த்தனகிரியைக் கட்டுவதுபோல் என் தலையில் சடகோபனைக் கட்டுவது என்றேற்படுமல்லவா? ஆயினும், என் சிற்றறிவிற் செட்டியமட்டில் ஏதோ சில பல ஸ்ரீ சடகோபர் மகிமையைப்பற்றிச் சொல்லப் புகுவதில், முதலாவது அவருடைய திவ்ய சரித்திரத்தைப்பற்றி தினையாவாயினும் சொல்லுவது அவசியமெனத் தோன்றுகிறது. நலிசெய்து உயிர்களை நாசமுறச் செய்விக்கும் கலிபுருஷன் தோன்றிய 43-வது நாள் அதாவது பிரமாதி வருஷம் வைகாசிமாதம் 12-ந்தேதி பௌர்ணமி வெள்ளிக்கிழமை விசாகத் திருநாளில், திருக்குருகூரில் காரியார்க்கும் உடைய நங்கையார்க்கும் திருக்குமாரராக இவர் திருவவதரித்தருளினர். நவீன சரித்திர ஆராய்ச்சி பிரகாரம், நாம் கூறிய நாளும் வருஷமும் சரியானவையா என்று நாம் ஆலோசிக்கவேண்டிய அவசியம் இப்போது வேண்டாம். சகலரும் நம்புவதும் சம்பிரதாயம் கூறுவதுமே நமக்கு இப்போது போதுமானவை Historical Resarches archaeological Researches என்கிற தொன்மைச் சரித்திர ஆராய்ச்சி வழியாக நம் புராதன சரித்திரங்களையும் புராணக் கோட்பாடுகளையும் பரிசோதிக்கப் புகுங்கால், விநோதமான முடிவுகளும் விசித்திரமான நோக்கங்களும் விளையாட்டாய் வந்து விளைவிக்கின்றன. மனு என்பவருடைய காலவரையறை செய்த மேலவர் ஒருவர் Sir W. Jones என்பவர் கிறிஸ்து பிறப்பதற்கு முன் 1280 என்று குறிக்கிறார். Professor Maxmuller கிறிஸ்து பிறப்பதற்கு முன் 200 வருஷங்கள்தான் என்கிறார். Schlegel என்பவர், 200 அதி சமீபம் 1280 அதிதூரம் ஆகையினால் மனுவின்காலம் 1000 B. C. என்று வைத்துக் கொள்வோம் என்கிறார் Elphinston 900 என்கிறார். வில்லியம்ஸ் 500 என்கிறார். இவ்விதமான சஞ்சல சாகரத்தில் நமக்குச் சஞ்சரிப்பே வேண்டாம். இந்த நிலைமையில் ஸைன்ஸ் படிப்பதினாலேயே சாமியில்லை என்று கூறும் நம்மவர் ஆராய்ச்சி

நடுவே வந்துவிடுமாயின் ஹோ ஹோ சடகோபர் என்பவர் ஒருவர் இருந்ததேயில்லை; அவர் முயற்கொம்பும் ஆகாயதாமரையுந்தாம் ஆவர். முந்தியநாள் சங்கட முதலியார் ஒருவர் எழுதிச் சடகோபர் பேரில் சாற்றிவிட்டதன்றோ திருவாய்மொழி என்று சராமாரி பொழிந்தது போற் பதமாரி பொழிவர். எவ்வாறாயினுமாகுக; சங்கட முதலியார் திருவாய்மொழி பாடினதாயின், சங்கட முதலியாரே நமக்குச் சடகோப முதலியாராவர். ஆதலின் ஞானபக்தி வைராக்யத்தை நாடிச் செல்லும் நாம், வழியேசெல்லும் சனியனை விலையே கொடுத்து வாங்காது, வேண்டியமட்டும் இதைப்பற்றிக் கூறி வேறு விஷயங்களுக்கு விரைந்து செல்வோம். உலகம் வாழவும், உண்மை விளங்கவும் அவதரித்த சடகோபர் அழுகை பசி முதலியன அசைவேயிலாதிருக்கக் கண்ட தாய் தந்தையர்கள் வருந்தி தமையன் அவ்வூர்ப் பெருமான் முன்கொண்டுபோய் சேவிக்கச் செய்து மாறன் என்கிற திருநாமமிட்டு புளிய மரத்தடியில் தொட்டிலிட்டு வளர்த்தினர். பதினாறுவருஷம் வரையிலும் பத்மாசனராய் ஞானமுத்திரையோடு பசிதாகமில்லாமல் சடகோபர் வீற்றிருந்தனர்.

(இன்னும் வரும்.)

விக்கிரகாராதனம்.

(இலத்தூர்—சுந்தரராஜ சாஸ்திரிகள்.)

(முன்தொடர்ச்சி)

எவர் வேதவாக்கியங்களில் விசேஷ விசுவாசம் வைத்திருக்கின்றார்களோ அவர்க்கு அவசியம் பிம்பவழிபாடுண்டு. அதற்கு வேண்டிய பிரமாணங்களையும் முன்னரே எடுத்துக் காட்டினோம். அவைகளில் வேதப்பிரமாணங்களும் ஸ்மிருதிப்பிரமாணங்களும் காட்டப்பட்டன. இனி மேற்றிசையார் சில பொம்மைகளைப் பூசைசெய்வதுபோல் ஆரியராகிய நம்மவர் செய்வதில்லை. பின் வேதாகமங்களிலுள்ள மந்திரபூர்வசம்ஸ்காரங்களால் பகவத்ஸாந்நித்தியம்பெற்ற திருவுருவங்களையே யாம் பூசிப்பது. நமக்கு மந்திரங்களே குலதனம். அம்மந்திரங்கள் வைதிகம் என்றும் தாந்திரிகம் என்றும் இருவகைப்படும். அவைகளை முறைப்படி அனுஷ்டித்தால் அதனால் மனிதர் அடையும் பயன் இவ்வளவென்று சொல்ல முடியாது. இம்மந்திரங்களாற்றான் முற்காலத்து வைதிகர் அளவற்ற பெருமை பெற்றார்கள். இக்காலத்தும் வெகு சிரமப்பட்டுச் சிற்சில மந்திரங்களைச் சிற்சிலர் கண்டுபிடித்து ஸாதித்து அதனால் சில வற்புதங்களையும் செய்துவருகின்றார்கள். அம்மந்திரங்களுள் வைதிக மந்திரங்கள் கடவுளது உயிர்தல் என வ்யபதேசிக்கப்படுதலால் அநாதிநித்தமாய் அபௌருஷேயமாய் உள்ளன. இவ்விஷயத்திற் சிலர் ஐயமுற்றுச் சில கூறுவதுண்டு. அவர் கூற்று வருமாறு "வேதங்களில் கண்ட பொருள் என்றும் மாறா நிலையுள்ளது. சொற்கள் அப்பொருள்களுக் கேற்ப அவ்வக்காலத்துப் பண்டிதர்களால் சேர்க்கப்பட்டிருக்கலாம். (இங்கு பண்டிதர் எனக் குறித்தது ஆதிகால மகரிஷிகளையே) ஆதலாற்றான் "கடவுள் பிரமனுக்கு வேதங்களையும் பொருளையும் உபதேசித்தருளினார்" என வேதமே சொல்லுகின்றது. அவ்விதம் பரமனிடம் பிரமன் கற்ற சொற்களைப் பொருள்களுக்கேற்பச் சொற்களமைத்த காலம் சொற்பமே" என்பது. இது மிக அவலம். என்னையெனில், இவ்விதங் கூறுதற்கு இடையூறு வெகுவாயுளது. வேதங்களுக்குத் திருவச்சொல்லேயன்றி வேறல்ல. அவைகள் "சப்தப்பிரதானம்" என்று பெயர்பெற்றன. அவைகளுள் சொல்லே பிரதானம் என்பதற்குச் சாக்ஷியம் வேண்டுமானால் அம்மந்திரங்களை யுச்சரிப்பதில் எழுத்துக்கள் மாறி உச்சரிக்கப்பட்டால் அதனால் வருங் கெடுதியே போதுமானதாகும்" இவ்விஷயம் வைதிக தாந்திரிக இருவகை மந்திரங்களுக்கும் உளதே.

இம்மந்திரத்திற் பிரதானம் எழுத்தே என்பது நிச்சயம். வேதமந்திரங்களும் அவ்விதமே யாவதில் தடை ஏதுமில்லை. இனி வேதங்களில் மந்திரபாகங்கள் அவ்விதமிருந்தாலும் மற்றைப் பாகங்கள் அநாதியல்லவே யெனவுங் கூடாது. அவ்விதஞ் சிறிதுபாகம் பிரமாணம் எனவும் சிறிது அப்பிரமாணம் எனவும் சொல்லல் அமையாது. சிலவிடம் விருத்திராசுரவதம் முதலிய கதைகள் வேதங்களிற் காணப்படுவதும் அவைகளுக்கு எக்காலத்து சம்பவமும் விஷயமே யாதல்பற்றி யென்றறிய வேண்டும். வேதம் முக்காலத்தும் உளதாதலால் சில நிகழ்வது போலவும் சில காரியங்கள் நடந்தனவெனவும் சில வருவன போலவும் கூறுவது அதனியல். இனி வேதவாக்கியங்களும் புருஷர் எழுதியதாயின் "எழுதாமொழி" என அவைகளை வடநூலார் வழங்கும் வழக்கம் எங்ஙனம் ஒவ்வும்? அவைகளைப் படித்திடில் நற்பயனுண்டாம். அவைகளைப் படிக்காதொழியின் கருதிய பயன் கைகூடாது. மேலும் வேதங்களிற் கண்ட பொருளையே வெளியிடும் இயல்பினவான தருமசாஸ்திரங்களுக்கும் வேற்றுமையும் ஒழியும். இப்பொழுது அவை பௌருஷேயங்கள் எனவும் மற்றவை அங்ஙனமல்லவெனவும் வேற்றுமை உண்டு. வேதங்கள் என்றும் கேள்வியில் முதல்படுவதால் "சுருதி [கேட்கப்படுவது] என்றும் தருமசாஸ்திரங்கள் நினைக்கப்படுவதால் ஸ்மிருதி (நினைக்கப்படுவது) என்றும் வழங்கப்பட்டு வரும் அநாதிவழக்கும் ஒழிந்திடும். வேதவாக்கியங்களைக் கேட்பதால் அத்யயனம் செய்வதாலும் பற்பல நற்பயன்களைக் கூறும் நூல்களும் வீண்வாக்கியங்களாகும். வேதங்களுள் ஒரு மந்திரத்தை பல தடவை உச்சரிப்பதில் அதிகப் பயனுண்டு. பொருளே முக்கியமாயின் ஆவர்த்தி செய்வதில் அதிகப்பயன் எப்படிக் கூடும். படிப்பதில் சுவரம் கெட்டால் பொருளுக்கு ஏதும் குறைவில்லையாயின் சுவரங்களை நியமப்படுத்திய நூல்களின் பயன்தானென்ன? அதனாற்றான் வித்தியாரணியர் முதலிய கவிவாணர் "வேதங்கள் சப்தப் பிரதானம் பிரபுபோன்ற" எனவும் எழுதினர். அதிகம் எழுதுவதில் பயன் ஏது. வேதங்கள் சப்தப்பிரதானம் என்பது கல்மேலெழுத்து. ஆதலாற்றான் ஆகமங்களில் பிரதிஷ்டைகளில் தேவதா ஸாந்நித்தியம் உண்டாகவேண்டிப் பல வைதிகமந்திரங்கள் ஹோமங்களில் விநியோகப்படுகின்றன வன்றிப் பல மந்திரங்கள் ஆவர்த்தியும் செய்யப்படுகின்றன. பிம்பங்களில் நியாசம் கும்பங்களில் நியாசம் இவைகளும் செய்வது வேதமந்திரங்களாற்றான் அதனாலே ஸம்புரோக்ஷணாதிகள் அனைத்தும் செய்யப் படுகின்றன. மந்திரங்களின் ஏற்றம் இறக்கம் என்னும் விசேஷங்களால் சிருஷ்டி சங்காராதிகள் சொல்லப்படுகின்றன. மேலும் மூலமந்திரங்களைக் கொண்டு செய்யும் வினைகளில் சில பீஜாக்ஷரங்களைச் சேர்த்து அவற்றையும் செபித்தால் அவை வெவ்வேறு பயன்களைத் தருவனவாகின்றன. உலகத்தில் ஒவ்வொரு ரோகங்கள் ஒழியவேண்டுமாயின் ஒவ்வொரு பதார்த்தங்களைச் சேர்ப்பதுபோல் ஒவ்வொரு பயனடைக்குமாறு ஒவ்வொரு பீஜங்களைச் சேர்த்து ஜபிக்கவேண்டுவ தவசியம். இனி ரோகவிபரீதமாதல் ஒருவித மருந்தைக் கூட்டினும் குறைப்பினும் அது பொருள்படா தொழியுமாறுபோல் அவ்வக்ஷரங்களை விபரீதமாய் ஏதோ சில பீஜங்களைச் சேர்த்தும் குறைத்தும் விடுவனேல் அது விபரீதப் பயனளிப்பதில் சந்தேகமில்லை. இத்தேசத்தில் வைத்தியத்தில் சிறிதும் பயிற்சியற்ற இழிகுலத்தவர் செய்யும் வைத்தியம் பயனற்றதாக வைத்திய சாஸ்திரம் பெரும்பயன மாத்திரம் பிறழுவதுபோல் மந்திரவியலறியாத மாந்தர் செய்திடும் விபரீதப் பிரயோகத்தால் அதனுடன் ஜனங்களுக்கு மந்திரவிசுவாசம் ஒழிந்து வருகின்றது. இக்கலிகாலத்தில் சோம்பல் நிறைந்த சுஜனர் அநேகர் வேதங்களில் விசுவாசமற்றவராய்க் கடவுளுண்மையிலும் சம்சயமுள்ளவராய் மந்திரங்களை ஒருவர் உச்சரித்து உடனே சித்தியைக்காட்ட விரும்புவோராய் வீண்காலப்போக்குச் செய்து மந்திரங்களை அவமதிக்கிறார்கள்; பொய்யெனவும் சொல்லுகிறார்கள். பரபாஷைப் பயிற்சி மிகுந்த பலரிடம் இவ்விஷயம் எளிதில் அகப்படும்.

(மற்றது வரும்.)

ராஜபுத்திர ஸ்தானம்.

——(s)——

நமதுதேசத்தில் ஹிந்துமதா சாரத்தையும் இந்துகளின் நடையுடைய பாவானைகளையும் அனுசரித்த சூரியகுலோத்துங் கருக்கும் சந்திரகுல பூபதிகளுக்கும் பின் சந்ததியாராக விளங்கியசுதேசமன்னர்கள் ஆண்டுவரும் நாடுகள் பற்பல உண்டல்லவா? அந்நாடுகள் குஜினிமகம்மது என்பவன் இத்தேசத்தின் மீது எண்ணிறந்த குரகபதாதிகளுடன் படையெடுத்து வந்து கொள்ளையாடுவதற்கு முன்னே சுதேச மன்னர்களுடைய செங்கோலுக்கடங்கிச் சகலசம்பத்தையும் பெற்று நாகரிகத்திலும் தேர்ச்சியடைந்து வெகுகாலம் விளங்கின என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஆகிலும் அவைபலவாண்டுகளாகச் சத்துருக்களான அன்னிய தேசத்தவர்களுடைய அரசாட்சிக் குட்பட்டிருப்பதால், முன்னிருந்த சுதேச அரசர்களைப்பற்றிய வரலாற்றையும் அவரவர் காலத்தில் நடந்தகாரியங்களையும், கர்ண பரம்பரையாய்த் தோராயமாக வாயினும் கேட்டிருந்தவர்களும் எழுதிவைத்தவர்களுமில்லாமற் போயிற்று.' ஆனால் ஒன்று மாத்திரம் இக்காலத்தாராகிய நமக்குப் பளிங்குபோல் தெரியவருகின்றது; அது என்னவென்றால், அந்தந்த அரசர் வம்சபரம்பரை வெகுகாலம் வாசம் செய்து அரசு செலுத்தி வந்த நாடுநகரங்களை மகம்மதிய கலாபனைகளாலும் மற்றப் பிறதேசத்தாருடைய படையெழுச்சிகளாலும் போக்கடித்துக் கொண்டார்களென்பதே. அப்போது சாக அடிப்பட்டு மெய்ந்நொந்து சிலர் சஞ்சுழலவருந்தி, சிலர் கலைந்து, சிலர் ஓலமிட்டுத் தங்கள் கோட்டை கொத்தளங்களை பறிகொடுத்து ஓடி விடும்படியாக நேர்ந்தது; இப்படி பங்கபபட்டு வருந்துவோருக்கு உதவிசெய்து ஆதரிக்க ஒருவருமில்லாமல் அவர்கள் நாற்றிசையிலும் சிதறிப்போய் வெவ்வேறு பிரதேசங்களிற் சென்று சிந்தைநோய் மிகால் அடங்கி ஒடுங்கியிருக்கும்படி சம்பவித்தது. அப்படிப் போர் முகத்தினின்று துரத்தப்பட்ட சுதேசமன்னர்கள் பலர் தப்பிப்பிழைத்த தங்கள் குடும்பங்களுடனும் பரிஜனங்களுடனும் ராஜா புத்திரஸ்தானமென்று பேர்கூறப்பட்டு இப்போது வடமேற்கு மாகாணங்களில் ஒன்றாயிருக்கும் நாட்டில் குடியேறினார்கள். இவ்விதமாகக் குடியேறின சிற்றரசர்கள் முழுதும் நசித்துப் போகாமல், தங்கள் அரசுமுழுதும் கைக்கொண்ட அன்னிய தேசத்தார் தலையெடுத்து அதிகாரம் செலுத்தவும், பற்பல நூற்றாண்டுகளாகப் பார்த்துக்கொண்டு யானைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒருகாலம் என்பதை நினைந்து சௌரிய மற்றவர்களாய் ஒருவாறாக ஜீவித்து பூவிற்றகடையில் புல்விற்க நேர்ந்தவிதமாக இன்னுமிருக்கக்காண்கிறோம். முற்காலத்தில் சதுரங்கபலத்துடன் கீர்த்திப் பிரதாபங்களைப் பெற்று மாட்சிமை தங்கி விளங்கிய ராஜவம்சத்தார் இக்காலத்தில் சிற்றரசராக ஒருங்கி யொடுங்கி வாசம்பண்ணுகிற அந்த ராஜபுத்திரஸ்தானம் இப்பொழுது இருக்கும் நிலைமை எத்தன்மையதோ அந்த விவரத்தைச் சற்றுச் சுருக்கி இதனடியில் சொல்வோம்.

இந்த ராஜபுத்திரஸ்தானம் என்னும் நாடு 130,000 சதுரமைலளவு விஸ்திரணம் முள்ளது. பொம்பாய் ராஜதானிக்கும் சற்றுப் பெரியதான பிரதேசமென்று சொல்லலாம். அதில் ஒருகோடி இருபத்துமூன்று லக்ஷம் (1,23,00,000) ஜனங்கள் வசிக்கின்றனர். இங்கிலீஷ் துரைத்தனமாகிய அஜ்மீரம் என்பது அதின்மத்தியில் இருக்கின்றது. இது ஒழிய மற்றப்பூமி 19 சுதேசச் சிற்றரசர்களுடைய சுவாதீனத்தில் விடப்பட்டிருக்கின்றது. அவ்விடத்துக் குடிகள் வெகுவாய் ஹிந்தி என்கிற பாஷை பேசுகிறார்கள். ஹிந்தியாவது, மிகச் சிறப்புற்றோங்கிய பாஷையான ஸமஸ்கிருத பாஷையின் சொற்களும், அருக்கச் சொற்களும் கலந்த ஒருவகை மிச்சிரபாஷை. ஆரா வல்லி மலைத்தொடரால் அந்நாடு இரண்டு பங்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. அதில் மேற்பங்கு மணற்குன்றுகள் [illegible] நீர்வளமில்

லாத பாலைவனமாகவேயிருக்கிறது. அம்மணற் குன்றுகளின்மேல் பெருங்காற்றடித் தெப்பொழுதும் மணலைவாரி வீசிக்கொண்டேயிருக்கும். அப்படியிருந்தாலும் அவ்விடத்தில் சிறந்த நகரங்கள் கட்டப் பட்டிருக்கின்றன. அத்தேசத்துத் தென்கீழ்ப்பாகம் ஒரு தன்மையாயிராமல் மலைத்தொடர்களும், கல்புரதேசங்களும், மேட்டுத்தாக்குகளும், செழிப்பான விளை நிலங்களுமாகப் பலவிதமாயிருக்கும். வடமேற்குப்பாகத்தில் ளோனி என்கிற ஒரு நதியும், தென் கிழ்புறத்தில் சம்பல், பானஸ், ஸவர்மதி, மாஹி என்னும் நதிகளும்பிரவாகிக்கின்றன. ராஜபுத்திரஸ்தானத்தில் இயற்கையாய் அமைந்த நன்னீர்த் தடாகம் ஒன்றுமில்லை; ஆயினும் ஸாம்பர் என்னும் பிரசித்தமான உப்புநீர்த்தடாகமொன்றுண்டு. அங்கே சிலகிணறுகள் இருந்தாலும் அவற்றில் 200-300 அடி ஆழத்தின் கீழேதான் தண்ணீர் காணப்படும். அதனால் ராட்டினங்கள்போட்டு அடுக்கடுக்காய்ச் சால்களைக்கட்டிக் தண்ணீர் தூக்கிக்கொள்ளுகிறார்கள். அந்தேசத்தில் பிரயாணம் போகிறவர்களுக்கு கடகடவென்று ராட்டினம் இழுக்கும்ஓசை எப்பொழுதும் கேட்டுக்கொண்டேயிருக்கும். அந்நாட்டில் சிற்சில பாகங்களில் செழிப்பு நிலமும் விளைச்சலும் காணலாம்.

அந்நாட்டுப் பழையகுடிகள் பூமாதேவி அல்லது வனதேவதையின் வம்சத்தாரென்றும், பிறகு குடியேறின இராஜபுத்திரர்கள் சூரிய வம்ஸத்தாரென்றும் சொல்லுகின்றனர். இந்த ராஜபுத்திரர்களைப் போலவே சிறிது வித்தியாசமில்லாமல் மற்றொரு ஜாதியார் இருக்கின்றனர்; ஆதலால் அவர்கள் முதலில் ஓரிடத்தில் பொதுவாயிருந்து பிறகு பிரிந்து போயிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

முதல் முதல் சுதேச ராஜாக்கள் இந்த ராஜபுத்திரஸ்தானத்தில் பிரவேசித்த காலம் இன்னதென்று வரையறுத்துச் சொல்ல முடியவில்லை. ஆயினும் மகமதியர் படையெடுத்த காலத்தில் மேற்கே பாஞ்சால தேசம்முதல் கிழக்கே அயோத்தி நாடுவரையில் ராஜபுத்திரர்கள் அரசு செலுத்திய துண்டு என்பதை முன்னமே குறிப்பிட்டிருக்கிறோமல்லவா? இவர்கள் எல்லோரும் ஒன்றுகூடிக் கட்டுக்குலையாமல் வாழ்ந்திருந்தால் மகம்மதியரை இத்தேசத்தில் கால்பரவவொட்டாமல் துரத்திவிட்டிருக்கலாம். அப்படி ஐக்கியப்பட்டிராமல் உட்கலகத்தால் பிரிந்துபோய், நாளாவட்டத்தில் ஒருவரை ஒருவர் வெற்றிகொண்டு ராச்சியத்தைக்கைக்கொள்ள விரும்பி, மகம்மதியரையடுத்து அவர்கள் காலாலிட்ட வேலையை கையால் செய்யத் தொடங்கினார்கள். மற்றும் சிலர் தங்கள் பெண்களைத் தமது குலநலத்தை மறந்து அரசு செலுத்தவந்த மகமதிய ராஜகுமாரர்களுக்கு விவாகம் செய்து கொடுத்துவிட்டார்கள். ஆனால் உதயபுரத்திலிருக்கும் சூரியவம்சத்து க்ஷத்திரியர் மாத்திரம் குலாசாரம் மதாசாரம் பழுதுபடாமல் சுதந்தரராய் ராஜபுத்திர வம்சத்தாரை விடச்சிறந்த நிலையிலிருந்து யாவருமதிக்க வாழ்ந்து வருகிறார்கள். மேலும் ராணாக்கள் என்று பட்டப்பெயர் வகித்து இதுவரையில் தங்கள் ராஜகுமாரத்திகளை மகம்மதிய பிரபுகளுக்கு மணம் செய்விக்காமல் பரிசுத்தமாக இருந்தோமென்று பெருமைபாராட்டி வருகிறார்கள்.

அக்பர்பாட்ஷா டில்லியில் அரசு செலுத்துவதற்கு முன்வரையில் இந்தராஜபுத்திரப் பிரபுக்கள் தங்கள் சுவாதீனத்தை இழந்து போகாமல் காப்பாற்றிவந்தார்கள். அவன் பட்டத்திற்கு வந்தவுடனே கலகங்கள் உண்டாக்கித் தங்களுக்கிருந்த சுவாதீனம் சுதந்திரங்களை அதிசிக்கிரமாகப் பறிகொடுத்துவிட்டு, பாட்ஷாவினால் கொடுக்கப்பட்ட உம்பராம் சம்பராம் பெற்று, மேன்மக்களாயிருந்தவர்கள் கீழ்மக்களாகிவிட்டார்கள்.

இவ்வாறு சிலகாலம் சென்றபின்னர் மராட்டியர் என்னும் மூர்க்கரோடு எதிர்த்துப் போராட நேர்ந்து, அவர்களையும் வெல்லமாட்டாமல் முன்னினும் கேடாகக் கீழ்ப்பட்டு முற்றிலும் நிலைகுலைந்து, இருந்த நிலங்களைப் பறிகொடுத்துக் கப்பங்கட்டி அவர்கள் ரக்ஷணையைப் பெற்று அடங்கியிருந்து, அவர்கள்

வேண்டியபோதெல்லாம் எப்பேசும் பேசாமல் பொருளைச் சேகரித்துக் கொடுத்துக்கொண்டு, அவர்கள் செய்யும் கொடுமைகளால் துன்பப்பட்டேயிருக்க நேரிட்டது. பிறகு மராட்டிய குதிரைக்காரர் தேசமெங்கும் சூறையாடப் புறப்படவே, கோரமான யுத்தங்கள் சம்பவித்தன. கி. பி. 1818வருஷத்தில் இங்கிலீஷ்காரர் இந்தச் சுதேசமன்னர்களுக்கும் குடிகளுக்கும் துணைப்படையாக முன்வந்து நின்று பொல்லாங்கு செய்யும் மராட்டியரை எதிர்த்து அதம்செய்து போர்க்களத்தில் மடியச்செய்து ராஜபுத்திரர்களுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தார்கள். மேலும் இவர்களை அவரவர் நாட்டில் மறுபடி நிலைத்திருக்கச் செய்து, என்றென்றைக்கும் சத்துருபயமில்லாமல் வாழ்ந்திருக்கும்படி காப்பாற்றி வருகிறார்கள்.

ஒவ்வொரு ராஜபுத்திரச் சிற்றரசனும் பற்பலவாறாகப் பிரிந்திருக்கிற தன்னுடைய கூட்டத்துக்கு அதிபதியாயிருந்து, அந்தந்தப் பிரிவினருக்குத் தலைவராயிருப்பவர் தன்னுடைய ஆதிபத்தியத்திற்குக் கீழ்ப்படிந்துகப்பங்கட்டிக்கொண்டு வரும்படி அதிகாரம்செலுத்துகிறான். இந்தத் தலைவர்களுக்கு விட்டிருக்கிற நிலங்கள் போக மற்றப் பூமியைச் சிற்றரசர்கள் தங்கள் சுவாதீனத்தில் வைத்துக்கொண்டு அரசு செலுத்தி வருகிறார்கள். இவனுடைய ஆட்சிக்கு உட்பட்ட தலைவரும் பரம்பரையாக அனுபவித்துவந்தபூஸ்திதியை சுவாதீனமாகஅனுபவித்துவர பாத்தியதையுண்டு. இவர்களுக்கு டாக்கர் என்று பட்டப்பெயர். இவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்ட குடிகளிடத்திலும் அடுத்திருப்பவர்களிடத்திலும் வரி இறைவாங்கவும் அவர்களை ஊழியக்காரராக வைத்துக்கொள்ளவும் சுதந்திரம் பெற்றவர்களாயிருக்கிறார்கள்.

இந்த ராஜபுத்திரவம்சத்தார் மேலான அந்தஸ்திலிருந்து செல்வாக்குடையவர்களாயிருந்தாலும் கணக்கிட்டுப் பார்க்குமளவில். இவர் ஜனத்தொகை 50-லக்ஷத்திற்குமேற்படவில்லை! இவர்களுக்குப்பின் அந்தஸ்திலிருக்கிற பிராமணர்களோ இரட்டிப்புக்கணக்காயிருப்பார்க...

அத்தேசத்தில் வடமேற்குப் பாகத்தில் ஒரேபோகந்தான் பயிரிடப்படுகிறது. ஹாரவல்லிமலைக்குத் தெற்கிலும் கிழக்கிலும் வருஷத்தில் இரண்டுபோகம் பயிரிடப்படுகின்றன. மேற்கிலுள்ள மணல் வெளிகளில் வசிப்பவர்களுக்கு முக்கியமான செல்வம் ஒட்டகமும் ஆடுமாடுகளுமேயாம்.

அங்கே பயிர்த்தொழில் மாத்திர மல்ல; வர்த்தக வியாபாரங்களும் மிகுதியாக நடந்தேறுகின்றன. வட்டிக்குக் கடன்கொடுப்பவரும், காசுவர்த்தகம் செய்பவருமான மார்வாடிவியாபாரிகள் இத்தேசம் முழுமையும் பிரசித்தமானவர்களன்றோ?

அத்தேசத்திலுள்ள ஜனங்கள் வெகுவாய் இந்துக்களே! ஜைனர்களும் மகம்மதியர்களும் விசேஷமாயுண்டு.

ராஜபுத்திரர்கள் மிகவும் ஏழ்மையான ஸ்திதியிலிருப்பவராயினும் தங்களுடைய சந்ததியின் பெருமையையே பாராட்டிக் கொண்டு, கலப்பையைத் தொடுவதென்றால் மிகவும் கவுரவக்குறைவாக நினைக்கிறார்கள். ஆயுதங்களைப் பிரயோகிப்பதென்றால் குதிரைமேலேறிப் பிரயோகிப்பதே பெருமை யென்றும், பதாதியாகப் பிரயோகிப்பது இழிவென்றும் எண்ணுகிறார்கள். இத்தராஜபுத்திரர்களை அவர்களுக்கு மேலானவர்கள் விசேஷமாகப் பெருமைப்படுத்துவதனாலும், தாழ்ந்தவர்கள் அதிகமாக வந்தனை வழிபாடுகள் செய்வதனாலும் இந்தச் செருக்கான எண்ணங்கள் அவர்களுக்குப் பின்னும் அதிகப்படுகின்றன. அங்கே ராஜாக்கள் வைத்துக்கொண்டிருக்கும் ஆடம்பரங்களையும் பிருதுகளையும் பார்த்தால் ஏதோ வேஷக்காரர்கள் போலத் தோன்றுகிறதேயன்றி ஸஹஜமாகத் தோன்றவில்லை: உயர்ந்த அந்தஸ்திலிருப்பவர் ஒவ்வொருவருக்கும் ஒரு கொடியுண்டு; வாத்தியங்களுண்டு. வெளியே புறப்பட்டால் இவைகளுடனேதான் புறப்படுவார்கள். துதிபாடுவோர் முன்னே பிருதுகள் சொல்லிக்கொண்டு போகவேண்டியது; யாவரும் காணிக்கைகளுடன் வந்து கண்டு வந்தனைவழிபாடு செய்யவேண்டும். இவை யா

வும் இவருடைய முன்னோர்கள் செய்த அருமையான செய்கைகளை நினைத்தேயன்றி இவருடைய யோக்கியதைக்காகவன்று.

இந்த ராஜபுத்திரர் மாத்திரமேயன்றி, அத்தேசத்துப் பிராதனமான குடிகளும் அவர்களைப்போலத் தாமும் ஸிங்கு என்கிற பட்டத்தை வகித்து மேலான அந்தஸ்துக்கு வந்துவிடவேண்டுமென்று விருப்பங் கொண்டு அப்படியே செய்ய ஆரம்பித்தார்கள். அதனால் காலாவிலே இம்மாதிரி அற்பமான ஜாதியாரும் பலர் ராஜபுத்திரராக மாறிப் போயிருக்கலாமென்று தோன்றுகிறது.

சூரிய சந்திரவம்சத்து ராஜாக்களென்று பேர் வகித்துக்கொண்டிருக்கிற ராஜபுத்திரர்களுள் பலர் கல்விப்பயிற்சி சிறிதும் இல்லாமல் மிகவும் சோம்பேறிகளாய்த் தங்கள் வம்சபாரம்பரையும் இன்னதென்று தெரியாமல், சிறந்த பண்டிதர்களும் சூரர்களும் சமர்த்தர்களும் தருமகுணமும் தரும சிந்தையும் உடையவர்களுமான தம்முடைய முன்னோர்களுக்கு முற்றும் மாறான நிலைமையிலிருக்கிறார்கள். தம்முடைய நிலைமை இப்படிப்பட்டது. தாம் செய்யவேண்டிய காரியமின்னது, தாம் ஆளுகிற ராஜ்யம் இத்தன்மையது என்று இவைகளைப் பற்றி ஒரு சங்கதியும் தெரியாது. பின் என்னவெனில், தமக்கு வேலைக்காரர்கள் என்றுபேர் சொல்வதற்கும் தகாதவர்களான அற்பர்களுடன் எப்பொழுதும் கூடிக்கொண்டு குடி வியபிசாரம் முதலான தீய செயல்களையே செய்துகொண்டு வெகுவாய்ப் பொழுது போக்குவார்கள். இது வேத விராச்சிய காரியத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. அதெல்லாம் பெருங்கொள்ளைக்காரர்களான காரியதரிசிகளுடைய ஆதீனமேயாம். அவர்கள் இட்டது பிச்சை அதனால் எப்பொழுதும் தீராக்கடன் தலைமேற்கொண்டிருக்கிறது. தமக்கு நடத்தவேண்டிய மரியாதை, கவுரவம் இவைதவிர மற்ற எந்த விஷயத்தையும் அவர்கள் சிறிதும் கவனிப்பதில்லை. மரியாதைகளை நடத்திக்கொள்ள வேண்டிய விஷயத்திலேமாத்திரம் வெகு கருத்தாயிருப்பார்கள். தங்கள் குமாரத்திகளைச் சிறுபிராயத்திலேயே தமக்கு மேலான அந்தஸ்துள்ள ராஜகுமாரருக்குக் கலியாணம் செய்து கொடுக்கவேண்டுமென்பதிலும் நவராத்திரி முதலான பண்டிகை தினங்களில் துதிசெய்பவர்களும் கவிராயர்களும் தம்மைத் துதிக்கவேண்டுமென்பதிலும் மாத்திரம் விசேஷமான ஆவலுண்டு. இத்தன்மையான பல துர்க்குணங்களெல்லாம் போய் ராஜபுத்திரர்கள் சீர்திருத்த வேண்டுமென்பதற்காக 1875ஆ அஜமீரத்தில், அவ்விடத்து ராஜகுமாரர்களுக்கும் தனவான்களுடைய பிள்ளைகளுக்காகவே ராஜகுமார வித்தியாசாலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. அந்த வித்தியாசாலையில் படிப்பதனால் கல்விப்பயிற்சி விசேஷமாய் உண்டாவது மாத்திரமேயன்றி, ஐரோப்பியருடன் பழகுவதனால் அவர்களுடைய நாகரிகமான நல்ல கொள்கைகளும் அந்த ராஜகுமாரர்களுக்கு நன்றாய்ப் படியுமல்லவா? அவற்றுடன் நல்ல தேகசவுக்கியமும் தருமகுணமும் உண்டாகும்படியான வழிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ராஜகுமாரருக்கும் தனித்தனியே விடுதிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்துக்களுக்கெல்லாம் பொதுவாகவே கல்விச்செருக்கோ செல்வச்செருக்கோ குடிச்செருக்கோ ஏதாவது ஒன்று சிறிது உண்டாயினும், அது விசேஷமாய்த் தலைமேற்கொண்டு போயிருப்பது ராஜபுத்திரரிடத்தில் தவிர மற்றெங்குமில்லை. அவர்களிடமுள்ள கவிராயர், வம்சாவளி சொல்லுவோர் முதலான ஆஸ்தானபண்டிதர்கள் சொல்லுகிறபடியே விசேஷமாய் அவர்கள் கேட்டு நடக்கிறார்கள். துன்பம்சேர்ந்தாலும் இன்பம் சேர்ந்தாலும் அவர்களைக் களிப்பிக்கின்றவர் இந்தப் பண்டிதர்களேயாதலால், ராஜபுத்திரர்களுக்கு அவர்களிடத்தில் மதிப்பும் அபிமானமும் மிகவும் அதிகம்! ஒரு கலியாணம் காட்சிகள் நேரிட்டால் அவர்களுக்கு அப்பொழுது அளவற்றபொருள் ஸன்மானமாகக் கொடுக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன் இரண்டு மேலான குடும்பத்தாருக்கு நடந்த ஒரு கலியாணத்தில் பிள்ளைவீட்டுக்காரன் இப்படிப்பட்ட வெகுமதி

களிலே ஒன்றரைலக்ஷம் ரூபாய் செலவு செய்துவிட்டான். அங்கே ஒரு குடும்பத்தில் ஒரு கலியாணம் நடந்ததென்றால், அதனோடு அந்தக் குடும்பம் பாழ்தான். தலைமுறை தலைமுறையாகத் தேடிவைத்த பொருள்களெல்லாம் ஒரு கலியாணத்திற்கே போதாமற்போய் கடன் மேலிட்டு, பின் சந்ததியாருக்குத் தீராக்கடனே பெரிய ஆஸ்தியாகிவிடுகிறது. இத்துன்பம் பொறுக்கமாட்டாமல் சிலர் தங்கள் குடும்பத்தில் ஏதேனும் பெண் குழந்தை ஒன்றுபிறந்தால் அதை உடனே கொன்று, பெரும்பாதகமான சிசுஹத்தி தோஷத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். இவைகளுக்கெல்லாம் காரணம் அவிவேகமாய்ப் பரம்பரையாக நடந்துவந்த வழக்கமும், வண்மைவரிசை, வெகுமதி முதலியவைகள் செய்யும் விஷயத்தில் ஒருவருக்கு ஒருவர் இளைக்கக் கூடாதென்கிற ஒரு துரபிமானமுமேயொழிய வேறொன்றுமல்ல. மானிடர்க்குள்ள வீண்ஜம்பத்திற்கு இதைப் பார்க்கிலும் மேற்பட்ட திருஷ்டாந்தம் உலகில் வேறெங்கேயாவதுண்டோ சொல்லுங்கள்! இருநூறு வருஷங்களுக்கு முன்னே ஜயபுரத்து மகாராஜா ஜயஸிங் என்பவர், ராஜபுத்திரஸ்தானத்தில் கலியாணச் செலவுகள் இப்படி மிதமிஞ்சியிருப்பது சரியல்லவென்று அறிந்து, அதைக் குறைப்பதற்குத் தகுந்த உபாயம் ஏதாவது செய்யவேணுமென்று அதற்காகப் பாடுபடத்தொடங்கினர். ஆயினும் அவருடைய ஏற்பாடு மற்றொரு ராஜ்புத்திரனுடைய வீணாஜம்பத்தினால் வீணாக்கப்பட்டது; ஏனெனில், அவன் தன் மகளுடைய கலியாணத்திற்கு ஒரு மகாராஜா எவ்வளவு பொருள் செலவழிக்கச் சாத்தியப்படுமோ அதைப்பார்க்கிலும் அதிகமான திரவியம் செலவு செய்தான். ஆயினும் அந்த ஜயஸிங் தாம்கொண்ட முயற்சியைக் கைவிடாமல், ராஜ புத்திரஸ்தானத்திலுள்ள விவேகிகளான பிரபுக்கள் பலரையும் அது விஷயத்தில் உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார்.

இது விஷயத்தில் இப்படியே இன்னும் பலபேர் முயன்றார்கள். அங்கே ஒருவர்க்கொருவர் அடங்கினவரல்லராதலால், ஒருவர்சொல்லை ஒருவர் கேளாமல் அம்முயற்சிகள் அத்தனையும் பயன்படாதவைகளாகவே யிருந்தன. கடைசியில் 1887-ம்வருஷத்திலே ராஜபுத்திரஸ்தானத்தில் ஸ்தானாபதியாயிருந்த கர்னல் வால்ட்டர் என்பவர் அந்த நாட்டைச் சீர்திருத்தவேண்டுமென்று நினைத்து, இந்தக் கலியாணச்செலவு விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பதற்காக; அந்தந்த ராச்சியத்துப் பிரதிநிதிகளாய்ப் பலரும் வந்து அஜமீரத்தில் ஸபை சேரவேண்டுமென்று தெரிவித்தார். அந்தந்த ராச்சியத்திற்குப் பிரதிநிதியாக அவ்விடத்து அதிகாரியும், உத்தியோகஸ்தன் ஒருவனும், அவ்விடத்து ஆஸ்தானபண்டிதனுடன் வந்து சேரவேண்டுமென்று ஏற்பாடுசெய்தார். அப்படியே யாவரும் வந்துகூடி ஆலோசித்ததினால் ஏற்பட்ட நன்மை கலியாணச்செலவு சுருக்கப்பட்டது ஒன்றுமாத்திரமேயல்ல? பாலியவிவாகம் கூடாதென்பதும் ஏற்படுத்தப்பட்டது. அதாவது, ராஜபுத்திரஸ்தானம் முழுமையும் புருஷர்களுக்கு 18 வயதிற்குமுன்னும், பெண்களுக்கு 14 வயதிற்குமுன்னும் விவாகம் செய்யலாகாதென்று ஏற்பாடுசெய்யலாயிற்று. பிறகு அந்த விதியைவிடாமல் அநுஸரித்துராஜபுத்திரஸ்தானத்தார் வரவர நாகரிகத் தேர்ச்சிபெற்று, இப்பொழுது மற்றவர்கள் பார்த்து அநுஸரிப்பதற்கு மேல் வரிச்சட்டமாயிருக்கிறார்கள்.

முற்காலத்திலே ராஜபுத்திரஸ்தானத்தில் ஒவ்வொரு நகரத்தைச் சுற்றிலும் ஒரு பெரிய மதிலும் அகழுமிருக்கும்; ஒவ்வொருவனும் வெளியே புறப்பட்டால் ஆயுதமும் கையுமாகவே வெளிபடுவான்; இப்பொழுதோ அந்த மதில்களெல்லாம் இடிந்து போயின; ஆயுதத்தைக் கையினால் தொடுவாரும் ஒருவருமில்லை.

சென்ற 1890-ம் வருஷம் கவர்னர் ஜனரலாகிய லான்ஸ்டௌன் பிரபு, ராஜபுத்திரஸ்தானத்துப் பிரதான நகரங்களுள் ஒன்றாகிய உதயபுரத்திற்குச்சென்று அவ்விடத்து ராணாவினால் சிறப்பாக உபசரிக்கப்பட்டு தர்பார் கூடிய சமயத்தில் தன்கருத்தை அடியில் வரு

மாறு தெரிவித்தார்:— "இந்த மகாராஜாவை நான் நேராகவே வந்துபார்த்து இவருடன் நேசம்பாராட்டியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை விளைவிக்கின்றது. ராஜபுத்திரஸ்தானத்திலுள்ள ராஜ்யங்கள் பலவற்றிலும் முதன்மையாயிருக்கிற ராஜ்யத்திற்கு இவர் தலைவராயிருக்கின்றார். ராஜபுத்திரஸ்தானத்திற்கு உள்ள பெருமையெல்லாம் முன் எப்படிப்பட்ட மகானர்களால் உண்டாயிற்று; அந்த மேலோர்களுடைய சிறப்புற்ற சந்ததியில் ஜநித்து, இம்மகாராஜாவை அவர்களுக்குப் பிரதிநிதியாயிருக்கிறார். ஆறுவருஷங்களுக்குமுன் இம்மகாராஜாவை சிங்காசனத்துக்குத் தேர்ந்தெடுத்து முதல், ராஜ்யாதிகாரம் செலுத்தும் விஷயத்தில் முதன்மையானவரென்னும்படி தமது திறமையை நன்றாக வெளியிட்டு வருகிறார். அன்றியும் நாம்கண்டு வியக்கத்தக்க பற்பல மேலான குணங்களும் தம்மிடத்தில் அமைந்திருக்கின்றன வென்பதைப் பல திருஷ்டாந்தங்களால் தெரிவித்துவருகிறார். இக்குணங்கள் பலவற்றுள்ளும் லோகோபகாரமான பல தருமசாலைகளும் பெரிய வைத்திய சாலைகளும் ஸ்தாபிக்கும் விஷயத்தில் இவருக்குள்ள உதாரகுணத்தைக்கண்டு நாம் முக்கியமாகக் கொண்டாடவேண்டியிருக்கிறது. தம்முடைய ராஜ்யத்திலே மாத்திரமன்றி மற்றவிடங்களிலும் இப்படிப்பட்ட தருமசாலைகள் ஏற்படவேண்டுமென்று மிகப் பாடுபட்டுவருகிறார். இப்படி குடிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று மகாராஜா தீர்மானித்ததைக்கேட்க நமக்கு மிகவும் சந்தோஷமாகிறது," என்பதாம்.

நாம் செய்யவேண்டிய விதிகள்.

சிலப்பதிகாரம், வரந்தருகாதை,
186-202-வரிகள்.

பரிவு மிடுக்கணும்
பாங்குற நீங்குமின்
றெய்வந் தெளிமின்
றெளிந்தோர்ப் பேணுமின்
பொய்யுரை யஞ்சுமின்
புறஞ்சொற் போற்றுமி
னூனூண் டுறமி
னுயிர்க்கொலை நீங்குமின்
றானஞ் செய்ம்மின்
றவம்பல தாங்குமின்
செய்ந்நன்றி கொல்லன்மின்
றீநட் பிகழ்மின்
பொய்க்கரி போகன்மின்
பொருண்மொழி நீங்கன்மி
னறவோ ரவைக்கள
மகலா தணுகுமின்
பிறவோ ரவைக்களம்
பிழைத்துப் பெயர்மின்
பிறர்மனை யஞ்சுமின்
பிழையுயி ரோம்புமி
னறமனை காமி
னல்லவை கடிமின்
கள்ளுங் களவுங்
காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும்
விரகினி லொழிமி
னிளமையுஞ் செல்வமும்
யாக்கையு நிலையா
வுளநாள் வரையா
தொல்லுவ தொழியாது
செல்லுந் தேளத்துக்
குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து
வாழ்வீ ரீங்கென்.

துர்க்கை அரசகுல தெய்வம்.

புறப்பொருள் வெண்பாமாலை, வஞ்சிப்படலம்,
5-வது கொற்றவைநிலை.

நீடோளான் வென்றிகொள்கென
நிறைமண்டை வலனுயரிக்
கூடாரைப் புறங்காணுங்
கொற்றவைநிலை யுரைத்தன்று.

(இ-ள்) நீண்டதோளினையுடையவன்வெற்றிபெறுவானாகவெனச்சொல்லி நல்லபொருள்களால் நிரம்பிய பாத்திரத்தை வெற்றியாகவெடுத்து அரசனுடைய பகைவரை முதுகுபுறங்காணும் துர்க்காதேவிநிலைமையைச் சொல்லியது.எ-று.

அணங்குடை நோலை பொரிபுழுக்கல் பிண்டி
நிணங்குடர் நெய்த்தோர் நிறைத்துகணம்புகலக்
கைவிரிய மண்டைக் கணமோடி காவலற்கு
மொய்யிரியத் தான்முந் துறும்.

(இ-ள்)தெய்வத்திற்குரித்தான எட்கசிவும் நெற்பொரியும் அவரை துவரையும் தருப்பணமும் நிணமும் குடரும் உதிரமு நிறைவித்துத் திரட்சி விரும்பக் கையிலே பாத்திரத்தையிருத்திய பூதகணங்களையுடைய துர்க்காதேவி வேந்தற்குப் பகைகெடத் தான் முன்னே எழுந்தருளும்.எ-று.

இப்பாக்களை நோக்க துர்க்கை அரசருக்கு சண்டையில் உதவுபவளென விளங்குவதால், அதை நோக்கியே பூர்வம் தமிழ் அரசர்கள் தமது கோட்டையின் வாயிலில் கோயில்கட்டி. பிறத்தியும், அவ்வம்மனை குலதெய்வமாகப்பாவித்துத் துதித்து வணங்கியும் வந்தனரென விளங்குகின்றது.

மணிமேகலை, சிறைசெய்காதை,
25, 38-வது வரிகள்.

மன்மருங் கறுத்த மழுவா ளெடியோன்
றன்முன் றோன்ற றகாதொழி நீயெனக்
கன்னி யேவலிற் காந்த மன்னவ
னிந்நகர் காப்போர் யாரென நினைஇ
நாவலந் தண்பொழி லண்ணார் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காவல
னிகழ்ந்தோர்க் காயினு மெஞ்சுத லில்லோன்
ககந்த னாமெனக் காதலிற் கூஉ
யரசா ளுரிமை நின்பா லின்மையிற்
பரசு ராமனின் பால்வந் தணுகா
னமர முனிவ னகத்தியன் றனாது
துயர்நீங்கு கிளவியின் யான்றோன் றளவுங்
ககந்தன் காத்தல் காகந்தி யென்றே
யியைந்த நாம மிப்பதிக் கிட்டு.

(இ-ள்.) அரசர்களுடைய பரம்பரையை வேரறுத்த பரசுராமன் போர்செய்தற்கு வந்த பொழுது, துர்க்கை அந்நாளில் இந்நகரையாண்ட காந்தனென்னும் அரசனைப்பார்த்து, 'நீ இப்பொழுது பரசுராமனோடு போர்செய்தற்குச் செல்லுதல் தகுதியன்று' என்று கூறுதலால், வேறிடஞ் செல்லுதற்கு நினைந்த அவ்வரசன் இந்நகரைப் பாதுகாத்தற்குரியோர் யாரென்று ஆராய்ந்து காவற்கணிகையின் புதல்வனும் வீரருள்வீரனுமாகிய ககந்தனென்பவனே இதற்குத் தகுதியுள்ளானென்று நிச்சயித்து, அவனை வருவித்து, "அரசாளுங் குலவுரிமை உனக்கின்மையால், அரச பரம்பரையோரைக் கொல்லுதலையே விரதமாகக்கொண்ட பரசுராமன் உன்னோடு போர்செய்தற்கு வாரான்; அகத்திய முனிவருடைய கட்டளை பெற்று யான் மீண்டு வருமளவும் இந்நகரை நீ பாதுகாக்கக் கடவை; உன்னாற் காக்கப்படுதலின், இந்நகர்க்குக் காகந்தியென்று பெயருண்டாகக் கடவது" என்று சொல்லிவிட்டு வேற்று வடிவங்கொண்டு தான் கருதியவிடஞ் சென்றான் என்பதாம். இப்பகுதியையும் நோக்க அரசருக்கு உற்றதுணையாய் நின்று கார்ப்பவள் துர்க்கையேயென விளங்குகின்றது.

கொற்றவன் என்பது அரசனைச்சுட்டி வெற்றியை யுடையவன் என்னும் பொருளில் நிற்கும். துர்க்கைக்குரிய பெயராகிய கொற்றவை என்பது அரசனுக்கு அவ்வெற்றியைத் தருபவள் என்னும் பொருளில் நின்று, அரசனுக்கும் துர்க்கைக்கும் உள்ள சம்மந்தத்தை விளக்கும். அதைமுன்னிட்டே அரசகுலத் தன்னா

லாகிய சேந்தனாரும் துர்க்கையைத் துதித்துள்ளார்.

சேந்தன் திவாகரம்,
9-வது தொகுதியின் யீற்றில்.
அண்ணல் செம்பாதிக் காணி யாட்டியைப்
பெண்ணணங்கைமூவுலகும்பெற்றவம்மையைச்
செந்தமிழ் மாலை யந்தாதி புனைந்த
நாவலனம்பற் காவலன் சேந்தன்.

என்னும் அகவலில் சூரிய குலத்துதித்த சேந்தன் என்னும்அரசன் துர்க்கையின்பேரில் "செந்தமிழ் மாலை யந்தாதி" பாடித் துதித்ததாகத் தெரிகின்றது. இவற்றானும் அரசருக்குக் குலதெய்வம் துர்க்கையென வறியலாம். அவ்வழக்கை முன்னிட்டே அவ்வரச பரம்பரையில் வந்த சூரியகுல கிராமணிகளும், சந்திரகுல நாடார்களும் நாளதும் துர்க்கையை குலதெய்வமாகப் பாவித்து வணங்கிவருவது.

(பத்திராதிபர்.)

ஜீவகாருண்ணியம்.

(தொடர்ச்சி.)

இனிப் பேன் முகடு கொசு முதலிய புல்லுயிர்களால் நமக்கு நேருந் துன்பமோ மிகச்சிறிது. அதனால் யாம் மரணம் முதலிய பெருங்கெடுதிகளை யாண்டும் அடைவதில்லை. இங்ஙனமாக, அவற்றை வேரோடு கொன்றுவிடுவது புத்தியாகுமா? இனிப்பெண்சாதி பிள்ளை முதலிய பாசத்தாரால் நமக்கு ஒவ்வோர்போது நிகழுந் துன்பமோ அதனிற்பலமடங்கு பெரிதாயிருக்கின்றன. இருந்தும் அவர்களை நாம் அதற்காகக் கொன்றுவிடாமல் சகிக்கின்றோம் நிற்க நாம் நமது சரீரத்தில் மிக்கு அபிமானமுடையராய் ஏதேனும் ஆபத்து நேருங்கால் நம்முடலுயிராதியைக் காத்துக் கொள்ள முயலுதல் போலவே அந்த "மசகம்" முதலியவைகளும் கட்டில் முதலிய சாமான்களைத் தலைக்கும்போது தம்முடலுயிரைக் காத்துக்கொள்ளப் பரபரத்தோடிச் சந்துபொந்துகளில் நுழைந்து கொள்வதை நாம் காணவில்லையா? இதனைச் சிந்திக்குங்கால் அவைகளைத் துடிதுடிக்கக் கொல்லுதற்குக் காரணம் விசாரணையின்மையும், இரக்கமில்லா வன்கண்ணமையும் மௌடீகமுமேயாவதன்றி நியாயங்காரணமாக மாட்டாதென்க. இது நிற்க. இனிப் பாம்பு தேள் முதலிய விஷஜெந்துக்களால் நமக்கு மரணம் முதலிய பெருந்துன்பம் நேருகின்றதாதலால், அவற்றைக் கொல்வது பாவமாகமாட்டாதேயெனின் அதைப் பற்றிச் சிறிது சிந்திப்பாம். மனிதருக்குவரும் இன்பதுன்பங்கட்குக் காரணம் கன்மமேயாம். அக்கன்மம் தனது பயனைத் துய்பிக்குமிடத்து மூவகை வழியால் புசிக்கும் ஆதிபௌதிகம் (பூதங்கள் அல்லது ஜடம் வாயிலாக வருவது) ஆதி ஆத்மிகம் (சேதனம் வாயிலாக வருவது) ஆதிதெய்விக (இவ்விருவாயிலுமன்றித் தெய்வந்தானே காரணமாக வருவது) இதன் விரிவு மற்றோரிடம் வரும் இதனால் பாம்பு தேள்முதலியவற்றால் யாவருக்குமே துன்பம் வருவதில்லை. பாம்பு முதலியன ஏராளமாய் வசிக்கும் புதர்களிலும் மலைநாடுகளிலும் அநேக ஏழைக்குடிகள் பிள்ளைகுட்டிகளோடும் நெடுங்கலாம் வசிக்கின்றார்கள். அவர்கள் தினந்தோறும் விஷக்கடி பட்டிறப்பதில்லை. செல்வவான்களோ அங்ஙனமல்லாத நல்ல இடத்திலே வலியகற்களால் அமைந்த மாடமாளிகையிலுள்ளே வசிக்கின்றார்கள். அவர்கட்கு அத்துன்பத்தைப் புசிக்குங் கன்மம் வந்தொத்துக்கொண்டால் அப்போது புகை நுழையவுங்கூடாத அவர்கள் பள்ளியறையினுள்ளே பாம்பு முதலியனவும் வந்து நுழைந்து பெருந்துன்பப்படுத்துகின்றன. இது நாம் அனுபவத்தி லுணர்ந்ததுதானே (இங்கு முனிவர் சாபத்தால் தக்ஷகனுக்கிரையாகிய பரிக்ஷித்துவின்பாரதக்கதையையும்நினைத்துக்கொள்க.) இனி நாம் நித்திரைசெய்யும்போது ஓர் நாள் மார்பின்மீது ஏதோவொன்று கனமாய்ப் படுத்திருக்கக் கண்டு அது வீட்டிலுள்ள பூனையென்று நினைத்துக் கையாலெடுத்து அப்பாலெறிந்து பின்னும் உறங்கினோம். சிறிது நேரத்தின்பின் அவ்வாறே கண்டு அதைக் கையில் தூக்கிக்கொண்டு கோபத்தோடு வாசலிற்கொண்டு போய்ப் போட்டபின் அது பூனையல்லவெனத்தெரிந்து இறைவன் திருவருளை வியந்துநின்றோம். அங்ஙனம் வீழ்ந்து நின்ற கிருஷ்ணசர்ப்பம் மெல்லெனப் படம் விரித்து வழிபார்த்துத் தன்னிருக்கை போய்ச்சேர்ந்தது. இனி மாபாரதம் அநுசாசனிகபர்வம் பீஷ்மயுதிஷ்டிரசம்வாதத்தில் கிராத புயங்கசம்வாதமாய் வரும் கதையையும் ஈண்டுச் சிந்திக்கற்பாலதென்க. இனித் துஷ்டஜந்துக்களைக் கொல்லலாம் என்பது சாமானிய விவேகிகள் கொண்டதோர் தருமம் ஆயினுமாகுக. கன்ம பந்தத்தில் நீங்கி நிரதிசயானந்தம் பெறற்குரிய சமயத்தில் உரியதேயத்தில்

உரிய மாபிற் றோன்றிய திவ்விய ஜன்மிகளாகிய நமது ஆரியமணிகள் கொள்ளற்குரிய முக்கிய தர்மம் அது வாகமாட்டாது. இது பற்றியன்றே "தன்னுயிர் நீப்பினும் செய்யற்கதான் பிறி, தின்னுயிர்நீக்கும்வினை" என்றார். "நான் மறையின் மெய்ப்பொருளை முப்பொருளாய் நான் முகத்தோன், தான்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த நூன் முறையில்" இத் தமிழ் வேத வாக்கியத்தில் இன்னுயிர் என்றது ஒவ்வொரு ஆன்மாக்களும் தமக்கு தாம் இனியராயிருத்தல் பற்றியென்க. அது "என்னில் யாருமெனக்கினியாரில்லை, என்னிலுமினியாலொருவனுளன்" எனவருந் தேவாரத்திருவாக்கிலுங்காண்க. இனி உடல்பெருத்த ஒரு பிராணியைக்கொல்வது பெரிய பாவமென்றும் உடல் சிறுத்த ஒரு பிராணியைக் கொல்வது சிறியபாவமென்றுங்கொள்வது யாண்டும் பொருந்தாது. அப்படிக் கொள்ளில் சிறிய வுருவுடைய மனிதரைக் கொல்வதினும் பெரியவுருவுடைய யானையைக்கொல்வது பெரிய பாவமென்றன்றோ சொல்லவரும். இது சுருதி யுக்தி அனுபவ விரோதமாம். இனிப் பொதுவாக எழுவகைத் தோற்றத்துள் எப்பிராணியைக் கொல்வதும் கொலைப்பாவமேயாயினும் எல்லாம் ஒரு சமமான பாவமாகாது, அவ்வவ்வான்மாக்கள் கொண்ட சரீர தத்துவங்கட்குத் தக்கபடி அறிவும் பலவேறுபட்டிருத்தலால் மரணத்துன்பங்களும் அவ்வாறு வேறுபட்டிருக்கும். ஆகவே கொலைப்பாவங்களும் குருவும் லகுவுமாய்ப் பலவேறுபடுமென்க. இனி அசரவுயிர்கள் ஓரறிவேயுடையனவாதலாலும் அவைகளை வெட்டியழிக்குங்கால் துடித்தல் பதைத்தல் முதலிய மரணத்துன்பங் காணுமையும் சிவப்பு உதிரஞ் சொரிதலில்லாமையாலும் அதனால் வருங்கொலைப்பாவம் அதிருக்குமுடையாதாயிற்று. இவ்வாறே மற்றவைகளையுமொட்டிச் சிந்தித்துக் கொள்க. இனி ஒருயிரைக் கொல்லுதல் துன்புறுத்தல் எல்லாம் பாவமெனப் பொதுவிற்கூறப்படினும் அவற்றுட் பாவமாகாததும் புண்ணியத்தை விளைவிப்பதுமாகிய வேறுபாடுகளுள் அவ்விதிவிலக்குகளிற் சிறிது காட்டுவாம். தம்வழி வாராத மக்களைத் தாய்தந்தையர் கோபித்தடித்துத் துன்புறுத்தலும், நோயாளரை வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும் தம்மாணைவழி யொழுகாத மாந்தரை அரசர் காவலிட்டும் தளைபூட்டியுங் கொன்றுந் துன்புறுத்தலும், இன்னோன்ன பிறவுஞ் செயல் வகையால் பாவம்போலக் காணப்படினும் கருத்து வகையால் அச்செயல்கட்கு இரக்கங் காரணமாவதன்றி வன்கண்மை காரணமாகாமையால் அவை பாவமாதலின்றிப் புண்ணியமாய்ச் சிறக்குமென்க. தீயோனொருவன் நல்லோனொருவனைத் துன்புறுத்தக்காலப்பழி அத்தீயோனை யொறுத்து நல்லோனைக்காக்க முயல்தலினுல் கொலையாதிகள் நேரினும் அவை பாவமாகமாட்டாது. நல்லோர் சுத்தாத்துமாக்களெனப்படுவர். தீயோர் அசுத்தாத்மாக்களெனப்படுவர். அஃறிணைகளிலும் இவ்வாறு பகுத்தறிந்துகொள்க. இதுபற்றியன்றே மூவாசையற்ற முனிவோர்களும் ஒரோர்கால் சிலரை கோபித்து சபித்தழித்தலும் அது பாவமாகாமல் அவருக்குப் புண்ணியமாயதும் என்க. இதுபற்றியன்றே கள்வர் முதலினோர் நம்மில்லம் புகுந்து அல்லல்விளைப்புழி யவரை எதிர்த்துப் பிறர் கொன்றவிடினும் அது கொலைக்குற்றமாகாதெனச்சட்டஞ்செய்து வேந்தர்களும் நீதிசெலுத்துவாராயினர். இது பற்றியன்றே.

"வலியார் மெலியார் தம்மாட்டிறுமாப் புய்க்கிற்
புலிபோற் சினவாப் பொறுமை—வலியாரும்
வீரத்தனிவாட்கை வேந்தருக்கு மெய்யருட்சீர்க்
காரருக்குமாகாக்கடை"

என்றுரைத்தார் நீதிநூலுடையார். இதுபற்றியன்றே துறவிகளாகிய தபோதனர்க்கும் பயிர்ப்புலங்காக்குங் குடிகட்கும் துன்புறுத்துவனவாகிய துட்டவிலங்குகளை வேட்டமாடி மறுப்பது உலகத்தையாளும் வேந்தர்க்குக் கடப்பாடாகுமெனத் தரும நூல்கள் முழக்கமிடுகின்றன. இனி அப்பொருட்டன்றி உணவின் பொருட்டும், விநோதப் பொருட்டும் வேட்டையாடி மன்னுயிர்களை வதைத்தல் அரசருக்குப் பாவத்தொழிலேயாமென்பது வெளிப்படை. இனி நம் தேயத்துள்ள பல மாந்தர் காளி கூளி காட்டேறி முதலிய தெய்வங்கட்கு ஆடுகோழி பன்றி முதலிய உயிர்களைப் பலியிடுகிறார்களே அதுவும் பாவந்தானே வெனில் அதிற்சந்தேகமென்ன? உயிர்க்கொலையும் உதிரப்பலியும் விரும்புவதெதுவோ அது பேய்க்கணங்களிற் சேர்ந்ததேயன்றித் தெய்வமாகமாட்டாது. "காக்கையின் கண்ணுக்குப் பீர்க்கம்பூப் பொன்னிறம்" என்பதுபோல மெய்யுணர்வில்லா வீணர்களுக்கே அது தெய்வமாய்த் தோற்றும். இரக்கஞ் சிறிதுமின்றி மன்னுயிர்களை வதைத்துண்ணும் வன்கண்ணர்கள் இங்ஙனஞ்செய்து கெடுகின்றார்கள். அப்புல்லறிவாளர் "அகிம்சையே பரமதருமமென்னு" நமது வேதங்கூறுவதை அறியாத அபரிபாகிகளேயாம். அந்தோ! வாழைப்பழம் சக்கரை பால் நெய் தேன் சக்கரைப் பொங்கல் அபூபவகைகளாகிய நற்பொருள் கொண்டு தெய்வத்தைப் பூசிக்க அறியாப்பேதைகள் அந்தோ! கொலை செய்கின்றனர். இவைகட்கு மகிழ்ந்து வரங்கொடுக்காத தெய்வமா ஆட்டு ரத்தம் கோழிக்குடல் பன்றியிறைச்சி கள்ளுச் சாராயங்களில் மகிழ்ந்து வரங்கொடுக்கும் பாவம்! பாவம்! இஃது

இங்ஙனமாயின் பசுபந்தனுதி யாகங்கள் செய்ய நமது வேதம் விதிக்கின்றதே. அதுவும் பாவமாகுமா? பாவமாயின் நமது வேதத்தின் பெருமை என்னும் எனின், அதுபற்றிச் சிறிது சிந்திப்பாம். அங்ஙனம் வேதத்தில் விதிக்கப்பட்டினும் வேதத்தில் விதித்த தருமமெல்லாம் ஓர் நிலையுடையனவாகா. பசுவைக் கொன்று யாகஞ்செய்ய விதித்த அவ்வேதமே "புல்லுள்ளவிடத்தில் மூத்திரம் விடலாகாது" என்று கூறுகின்றது. இவற்றைச் சிந்திக்குங்கால் முன்கூறியது ஏகதேச பரிபாகிகளுக்குப்பின்கூறியது முக்கிய பரிபாகிகளுக்குமாம் என்பது வெளிப்படும். பிள்ளைகட்குப் பாலூட்டும் பருவத்தில் பாலூட்டியும் சோறூட்டும் பருவத்திற் சோறூட்டியும் வளர்ப்பது உசிதமல்லவா? இதுபற்றியன்றே 'கன்மோபாசனை ஞானம்" என வேதம் முக்காண்டங்களாய் விளங்குவதென்க, இது பற்றியன்றே நமது வேதம் அனந்த சமயங்கட்கும் இடங்கொடுத்து நிற்பதென்க. தான் விதித்த ஓர் தருமத்தை மற்றொரு இடத்தில் தானே மறுத்துரைக்கிற நமது வேதம் எந்த விடத்தில் தான் கூறியதை மறுக்காது நிற்குமோ அதுஅவ்வேதத்தின் உண்மைப்பொருளாம். ஹிம்சையை விதித்த வேதம் அதை மறுத்து அஹிம்சையைக்கூறி முடித்தமையால் இது பரமதருமமென்பது மூவராலும் மற்ற யாவராலும் மறுக்கொண்ணு நிலைபெற்றது. இதுபற்றியன்றே

"நன்றாகுமாக்கம் பெரிதெனினும் சான்றோர்க்குக்
கொன்றாகுமாக்கங் கடை."

"அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்ற
னுயிர் செகுத்துண்ணாமைநன்று"

என்று இங்ஙனஞ் சித்தாந்தப்படுத்தோதியது தமிழ் வேதம். இஃதறியாதார் பலவாறு கூறுப. இனி வேதத்தில் விதித்தயாகக் கொலைக்கும் பிறவழிகளாற் செய்யப்படுங் கொலைகட்கும் தம்முள் வேற்றுமை பெரிதாகலால் ஈண்டதுபற்றி ஆசங்கித்தல் அவசியமன்றென விடுக்க. இனித் தருமசாஸ்திரங்கள் சிலவற்றிலும் அந்தணர் சிரார்த்தாதி கன்மங்களில் மாம்சம் புசிக்கக்கூறியதேனெனின் அதுபற்றி முந்திய அறநூல் பலவற்றிலும் ஆசங்கித்துப் பரிகரிக்கப்பட்டிருத்தலால் யாமீண்டு விரிப்பது அவசியமன்றென விடுத்தாம். இதுபற்றியன்றே

"கொல்லான்புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லாவுயிருந்தொழும்" என்றது தமிழ்வேதம்.

விக்கலுக்கு மருந்து.

(s)

(1) விக்கல் கண்டிருப்பவர்களுக்குச் செம்பருத்தியின் விதையைச் சட்டியிலிட்டுப் பொன்வறலாக வறுத்துப் பன்னீர் விட்டு உடனே இறக்கி ஆறிய பிறகு அரைக்கால் ஆழாக்கு அளவாக ஒருமணி நேரத்துக்கொரு முறை கொடுத்துக் கொண்டுவந்தால் விக்கல் நின்றுவிடும்.

(2) அல்லது குளவியின் அரக்குக் கூண்டைச் சுத்தஜலத்தில் காய்ச்சி அரை ஆழாக்கு அளவாக ஒருமணி நேரத்திற்கு ஒருமுறை கொடுக்க வேண்டும்.

(3) அல்லது ஒரு பலம் சித்தாமணக் கெண்ணெயையும் அவ்வளவு முலைப்பாலையும் வெண்ணெய்போல் குழைத்துக்கொண்டு, அதில் பாதி உள்ளுக்குக் கொடுத்து மற்றபாதியைத் தொண்டையிலிருந்து தொப்புள் பரியந்தம் மெல்லிய துணியை இரண்டுவிரற்கடை அகலத்தில் போட்டு அதன்மீது விடாமல் தடவிக் கொண்டு வரவேண்டும். அப்படி செய்து வந்தால் விக்கல் நின்றுவிடும்.

(4) அல்லது நண்டு வளைக்குள் இருக்கும் ஜலத்தை மண்கலவாமல் எடுத்துக் கொண்டு வந்து அடிக்கடி கொடுத்துக்கொண்டு வந்தாலும் விக்கல் நின்றுவிடும்.

(5) அல்லது கரும்பு ரசத்தை அடிக்கடி கொடுத்துக் கொண்டு வந்தால் விக்கல் நின்றுவிடும்.

டி. எஸ். குமாரசுவாமி பிள்ளை,
சூளை, சென்னை.
"சக்ரவர்த்தினி."

நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

1910-ௗ த்தில் ஸ்தாபிக்கப்பட்டு, 1918-ௗ த்தில்
1860ௗ த்திய 21-வது ஆக்டின்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

நாடார் மஹாஜன சங்கங்களுக்கோர் அறிக்கை.

ஐயன்மீர்!

நாளது 1925-26 ௗ த்திற்கு ஒரு பெரிய வேலைத் திட்டம் போட்டு பட்ஜெட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி ஸ்காலர்ஷிப்புக்காகவும், பிரதம பாடசாலை கிராண்டுக்காகவும் இவ்வருஷத்தில் அதிகப் பணஞ் செலவிடத் தீர்மானித்திருக்கிறோம். பிரசாரகர்களின் தொகையையும் அதிகரிக்கத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. சகல விதத்திலும் இவ்வருஷத்திய வேலைதிட்டம் முந்திய வருஷங்களின் வேலைத்திட்டங்களைக்காட்டிலும் விசாலமானது.

மேற் சொன்ன வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு நமது மஹாஜனங்களின் விசேஷித்த ஆதரவு அவசியம். தற்போதைய வருமானத்தைக் கொண்டு கவுன்ஸில் தன்னுடைய கடமைகளைத் திருப்திகரமாய் செய்ய முடியுமென்று நினைப்பதற்கிடமில்லை. இவ்வருஷத்தில் நாங்கள் எதிர்பார்க்கிற பிரகாரம் சந்தா, நன்கொடை, தலைகட்டுவரி தாராளமாய் வசூலானால்தான் பட்ஜெட்டின்படி செலவு செய்ய அனுகூலமாயிருக்கும்.

ஆதலின், சென்ற ஜெனரல் மீட்டிங்கில் தீர்மானித்தபடி சங்கத்தின் பொருளாதார நிலைமையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு நம் குலத்தினர்கள் வசிக்கும் ஒவ்வொரு ஊரிலும் வருகிற ஆவணி மாசத்தின் முதல் வாரத்தை நாடார் மஹாஜன வாரமாக கொண்டாடுவது எவ்வளவு அவசியமென விளங்கும். இது சென்ற வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட ஒரு புதிய ஸ்தாபனம். இவ்வைபவம் சிறப்பாய் நடைபெறுவதற்கு வேண்டிய சகல முயற்சிகளையும் எடுத்துக்கொள்வது அபிமானிகளின் கடமை. இவ்வருஷத்திலும் நாடார் மஹாஜன வாரத்தை விமரிசையாய் கொண்டாடுவோமாயின் வருஷா வருஷம் சங்கத்தின் பணவருவாயை அதிகரிப்பதற்கு இது ஓர் முக்கிய சாதனமாயிருக்கும்.

நம் வகுப்பினர்கள் வசிக்கும் ஊர்கள் தோறும் இவ்வாரத்தின் பிரதிதினமும் முற்பகலில் பஜனையுடன் ஊர்வலம் போவதற்கும், பிற்பகலில் வீடுவீடாய்ச் சென்று சங்கத்திற்கு சந்தா, நன்கொடை, தலைக்கட்டுவரி முதலியன வசூலிப்பதற்கும், இரவில் உபந்நியாசங்கள் செய்வதற்கும் ஏற்பாடு செய்யும்படி ஆங்காங்குள்ள தலைவர்களை அன்பாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அபிமானிகளெல்லோரும் தங்களாலியன்ற பிரயாசை எடுத்துக்கொள்வார்களாயின் இவ்வருஷத்திய பட்ஜெட்டில் கண்ட செலவுகளுக்கு போதிய திரவியம் இவ்வாரத்தில் சேகரிக்கப்படுமென்பதில் சந்தேகமில்லை. விசேஷ திரவியம் வசூலாகும் பட்சத்தில் இன்னும் அநேக ஏழை மாணவர் மாணவிகளுக்கு ஸ்காலர்ஷிப் கொடுக்கவும், பிரதம பாடசாலைகளுக்குத் தாராளமாய் பண உதவி செய்யவும், கோயமுத்தூர், சேலம் முதலிய புதிய இடங்களுக்கு ஆற்றல் வாய்ந்த பிரசாரகர்களை யனுப்பிச் சங்கத்தின் லக்ஷியங்களை பரவச் செய்யவும் பிரயோஜனமாயிருக்கும்.

ஆகையால், இவ்வாரத்தை சங்கத்திற்கு பிரதிஷ்டை செய்து இவ்வைபவம் சிறப்பாய் நடைபெறக் கவுன்ஸிலோடு ஒத்துழைக்குமாறு அபிமானிகளனைவரையும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

தங்கள் உண்மையுள்ள,
பா. ம. பாண்டிய நாடார்,
சிவ. பே. நா. சி. தங்கமணி நாடார்,
காரியதரிசிக...

ஆபீஸ்:—221, கீழமாரட்டு [illegible],
மதுரை, 12—7—

நாடார் மஹாஜன சங்கம்.

பத்தாவது கான்பரன்ஸ், மதுரை.

1925-ம்வூ ஜூன்மீ 8, 9, 10-ந்தேதிகளில் நடைபெற்றது.

பல ஊர்களிலிருந்து வரும் பிரதிநிதிகளை வரவேற்புக்காக பிரமாதமான ஏற்பாடுகளெல்லாஞ் செய்யப்பட்டது. மதுரை, மேலவாசி வீதியில் நர்த்தனகான ஆலில் கூடப்பட்டது. இவ்வாலுக் கெதிரிலும், இன்னும் சில தெருக்களிலும் வேலைப்பாடுள்ள பூபந்தல்களும், அழகாய் சித்தரிக்கப்பட்ட வளைவுகளும், தோரணங்களும், புஷ்பத் தொங்கல்களும் காணப்பட்டன. இப்பூபந்தல்களிலும், வளைவுகளிலும் சக்கரவர்த்தியும், சக்கரவர்த்தினியும், நீடூழி வாழ்க, நாடார் மகாஜன சங்கம் நீடூழி வாழ்க, அக்ராசனர் ஸி. பி. ராமசாமி ஐயர் அவர்கள் நீடூழி வாழ்க, சங்கத்தலைவர் வி. பாலகுருசாமி நாடார் நீடூழி வாழ்க, பத்திராதிபர்கள் நீடூழி வாழ்க, டெலிகேட்டுகளுக்கு நல்வரவாகுக என்றெல்லாம் எழுதப்பட்டிருந்தன.

பிரதிநிதிகள் தங்குவதற்கு ஸ்ரீ கூளைய நாடார் மெத்தைகளும், இன்னும்பல கட்டடங்களும் அமைக்கப்பட்டன. போஜன வசதிக்கு மதுரை, கிழமாசி வீதியிலிருக்கும் மொட்டைபிள்ளையார் பேட்டைக் கட்டடத்தில் வைத்துக் கொள்ளப்பட்டது.

முதல் நாள் நடவடிக்கை.

மாலை 3-மணிக்கு ஆரம்பம்.

(8—6—1925)

நாடார் மகாஜன சங்கம், 10-வது கான்பரன்ஸ் கொட்டகையில் பல விடங்களிலிருந்து வந்த பிரதிநிதிகள் இருபத்தைந்து ரூபாய் டிக்கட்டுகளும், பத்துரூபாய் டிக்கட்டுகளும் ஆறுரூபாய் டிக்கட்டுகளும், இரண்டுரூபாய் டிக்கட்டுகளுமாக வாங்கி இரண்டாயிரத்திற்கு மேல் விஜயஞ் செய்திருந்தார்கள். அதுசமயம் அக்ராசனர் ஸ்ரீ ஸி. பி. ராமசாமி ஐயர் ஸி. ஐ. ஈ. அவர்களும், ஸ்ரீ. வி. பாலகுருசாமி நாடார் அவர்களும் பாண்டு வாத்தியங்கள் முதலிய மரியாதைகளுடன் பந்தலுக்குள் அழைத்து வரப்பட்டனர். அதுசமயம் பல நாடார்குல முக்கியஸ்தர்களும் ஸ்ரீமான்களான, கனம், இராமநாதபுரம் இராஜா, சிங்கம்பட்டி ஜமீன்தார், இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர், கடம்பூர் ஜமீன்தார், டாக்டர் ஆண்டுரூஸ், யூனியன் சேர்மன் க. சின்னையா சேர்வை, ராவ் சாயபு, கற்பக விநாயகம் பிள்ளை, டிப்டி சூப்பிரண்டெண்ட், செ. வி. ராமாச்சாரியார், முனிஸிபல் கௌன்சிலர் ஷம்சுதீன் சாகிப் பகதூர், எம், ராஜம் நாயுடு, நல்லகுத்தாலம் பிள்ளை, முனிசிபல் கவுன்சிலர் சாலைமுதலியார் கொண்டைய நாயுடு, பி. ரெங்கசாமி நாயுடு, வக்கீல் மாணிக்கவாசகம் பிள்ளை, பி. ஸி. ஸ்ரீனிவாச ஐயங்கார் முதலிய பல கனவான்கள் விஜயமாயிருந்தனர்கள். உடனே நாடார்குல மித்திரன் உப பத்திராதிபர், ஸ்ரீ, சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியர் கடவுள் வணக்கம் பாடியபின், உபசரணைக் கமிட்டிச் சேர்மன், ஸ்ரீ, சிவ. பெ. நா. சி. தங்கமணி நாடார் அவர்களால் அக்ராசனரையும், டெலிகேட்டுகளையும், அன்போடும், ஆர்வத்தோடும் வரவேற்று, வரவேற்புப் பிரசங்கத்தை முடித்ததும்; 'கனம் ஆனரபிள் ஸி. பி. ராமசாமி ஐயர், எம். எல். ஸி. அவர்களை அக்ராசனம் வகிக்குமாறு இம்மகாடு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறது" என்ற தீர்மானத்தை, நாடார் மகாஜன சங்க பிரசிடெண்டு, பின்றயார், ஸ்ரீ வி. பாலகுருசாமி நாடார் அவர்கள் பிரரேபிக்க, அப்பிரரேபணையை, சென்னை, சட்டசபை அங்கத்தினர், ஸ்ரீ. பி. கே. எஸ். எ. ஆறுமுக நாடார் அவர்கள் ஆமோதிக்க, சென்னை ஐகோர்ட்டு வக்கீல் ஸ்ரீ எஸ். நடராஜ நாடார், B. A. B. L. அவர்களும், ஸ்ரீ எஸ். பொன்னுசாமி நாடார், B. A. அவர்களும் ஆதரிக்கப்பட்டு, சபை

யோர் ஏகோபித்த கரகோஷ்ட தீர்மானத்துடன் புஷ்பாரஞ் சூடப்பெற்று, ஐயர் அவர்கள் ஆசனத்தி லமர்ந்தனர். இம்மகாநாடு ஜெயம் பெற நடக்கவேண்டுமோறு விரும்புவதாக வந்த பல தந்திகளும் படிக்கப்பட்டன. பிறகு அக்ராசனர் தமது பிரசங்கத்தை ஆங்கிலத்தில் படித்தனர். அதன் தமிழ் மொழிபெயர்ப்பை ஸ்ரீ V. S. K. துரைசாமி நாடார் B. A. அவர்களால் படிக்கப்பட்டது.

அக்ராசனர் தமது பிரசங்கத்தின் முடிவில் "காலஞ்சென்ற சர். பி. தியாகராய செட்டியார் அவர்களின் அகால மரணத்திற்காக இம்மாகநாடு மிகவும் வருந்துகிறது" என்ற தீர்மானத்தை அக்ராசனர் பிரரேபித்துப் பேசுகையில் "நமக்கும், அவருக்கும் அடிக்கடி அபிப்பிராய பேதங்கள் இருந்துவந்த போதிலும், நாங்களிருவரும் அத்தியந்த நண்பர்களென்றும், அவர் மிகவும் திடபுத்தி யுள்ளவரென்றும், அவரது தேசாபிமானமும், மதாபிமானமும் மிகவும் மெச்சத்தக்க தென்றும்" பேசி தீர்மானத்தை எல்லோராலும் எழுந்து நின்று நிறைவேற்றப் பட்டது.

"ஐந்தாவது ஜார்ஜ் மகிபர்மீதும், அவரது அரசியல்மீதும் தங்களுக்குள்ள பூரண விசுவாசத்தையும், அன்பையும் இம்மகாநாடு தெரிவிக்கின்றது" என்ற தீர்மானத்தை, ஸ்ரீ சௌந்தர பாண்டிய நாடார் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு, ஸ்ரீ பி. ஆறுமுக நாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, ஸ்ரீ வி. எ. கந்த நாடார் அவர்களால் ஆதரிக்கப்பட்டு எல்லோரும் எழுந்து நின்று ஏகமனதாய் நிறை வேற்றப் பட்டது.

"நமது 10-வது மகாநாட்டு கௌரவ அக்ராசனர் கனம். ஸர், வி. பி. ராமசாமி ஐயர் அவர்களுக்கு, அரசர் பிறந்ததின் வைபவத்தை முன்னிட்டு, கே. ஸி. ஐ. பட்டம் கிடைத்ததைப்பற்றி இம்மகாநாடு மிகவும் சந்தோஷப்படுவதுடன், நம்மகாஜனங்களின் வாழ்த்துதலை அவருக்குத் தெரிவிக்கிறது" என்னுந் தீர்மானத்தை ஸ்ரீ மோ. சி. சிதம்பர நாடார். B. A; B. L; M. L. C. அவர்களால் பிரரேபிக்க, விருதுநகர், முனிஸிபல் கவுன்சிலர் உப அக்ராசனர் ஸ்ரீ. வி. வி. சண்முகநாடார் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. உபசரணைக்கமிட்டி காரியதரிசி, ஸ்ரீ. சி. வ. அ. வாலசுப்பிரமணிய நாடார் அவர்களால் அக்ராசனருக்கும், மற்றவர்களுக்கும், புஷ்பாரங்களிட்டு, வந்தனோபசாரத்துடன் முதல் நாள் மகாநாடுகலைந்தது.

இரண்டாம் நாள் நடவடிக்கை.

(மாலை 3-மணிக்கு ஆரம்பம்.)

(9—6—1925)

இன்று ஸ்ரீமான், பாலகுருசாமி நாடார் அவர்கள் அக்ராசனத்தின் கீழ்மகாநாடு ஆரம்பிக்கப்பட்டது.

கடவுள் வணக்கம் சேது நாராயணபுரம், ஸ்ரீ. வீ. ரா. சந்தண மகாலிங்க நாடார் அவர்களால் செய்யப்பட்டதும், தந்திகடிதங்களை வாசிக்கப்பட்டது.

அக்ராசனர். ஸ்ரீ. வி. பாலகுருசாமி நாடார் அவர்களது அக்ராசனப் பிரசங்கத்தை வாசிக்கப்பட்டது.

1. "நமது சங்கக்காரியதரிசியும், சிறந்த குலாபிமானியுமான. ஸ்ரீ. கூ. மு. அ. பழனியப்ப நாடார் அவர்களின் அகாலமரணத்தைக்குறித்தும், மதுரை தெற்குவாசல், நாடார் வித்தியாசாலைக் காரியதரிசியும், சிறந்த குலாபிமானியுமான ஸ்ரீ. பூ. சி. ச. சின்னையா நாடார் அவர்களின் அகாலமரணத்தைக் குறித்தும், தேனி, P. S. பாலய்ய நாடார் மெமோரியல் லைப்ரெரி காரியதரிசியும், சிறந்த குலாபிமானியுமான, ஸ்ரீ. ம. செ அ. துரைசாமி நாடார் அவர்களின் அகாலமரணத்தைக் குறித்தும் இம்மகாநாடு பெருந்துக்கமடைகிறது" என்னுந் தீர்மானங்களை தனித்தனியே நிறைவேற்றப்பட்டது.

2. நமது ஜனசமூக அபிவிர்த்தியைக் கருதி நாடார் எழை மாணவர்களுக்கு உணவு, உடை கொடுத்து கல்வி புகட்டும் ஆச்சிரமம் ஒன்றை நடத்தி வருமாறு நாடார் மஹாஜன சங்கம் கௌன்சிலை இக் கூட்டம் கேட்டுக் கொள்வதோடு நாடார் மஹாஜனங்களும் இதற்குபூரண ஒத்தாசையும் பொருளுதவியும் செய்யும்படி வேண்டிக்கொள்கிறது.

3. ஆப்காரி கீழ் உத்தியோகஸ்தர்கள் சுத்தமான பதனீரையும், கள் என அவர்களது சொந்த அதிகாரத்தில் சார்ஜ் செய்யும் அக்கிரமச் செயல்களை மாற்றி அந்தந்த கிராமங்களுக்குள்ள 5 பெரிய குடித்தனக்காரர்களால் கள்ளென ஒப்புக்கொள்ளப்பட்ட ரிப்போர்ட்டை வைத்து சார்ஜ் செய்யப்பட வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. நம் நாடார் மஹாஜனங்களால் நடத்தப்படும் பொங்கல் உற்சவ காலங்களில் ஜீவபலியிடுவதை நிறுத்தவேண்டுமென இம்மஹாநாடு தீர்மானிக்கிறது.

5. நமது நாடார் ஏழைமாணவர் கல்வி அபிவிர்த்திக்காக ஒரு லக்ஷம் ரூபாய்க்கு குறையாமல் எக்காலமும் சங்கத்தில் பண்டு இருந்து வருவதற்கேதுவாக மஹாஜன சங்க கௌன்ஸில் சிட்டு 1-க்கு ரூபாய் 1-0-0 வீதம் இரண்டு லக்ஷம் சிட்டுகள் கொண்ட லாட்டரி ஒன்றை ஆரம்பித்து நடத்தும்படி கேட்டுக்கொள்வதுடன் நாடார் மஹாஜனங்களும் இதில் பூரணமாக ஒத்துழைத்து ஜெயம்பெற முடிக்குமாறு இம்மஹாநாடு வேண்டிக்கொள்கிறது.

6. நமது நாடார் மஹாஜனங்களுடைய எல்லையை பல சர்க்கில்களாகப் பிரித்து ஒவ்வொரு சர்க்கில்களுக்கும் தனித்தனியாக உத்தியோகஸ்தர்களை நியமனம்செய்து அவைகளின் மூலம் நாடார் மஹாஜன சங்க நிர்வாகம் கஷ்டமின்றி நடைபெற ஏற்பாடு செய்யும்படி இம்மகாநாடு மகாஜன சங்கம் கௌன்சிலை கேட்டுக் கொள்ளுகிறது.

7. நம் மாகாணத்தில் எழுதப் படிக்கத் தெரிந்த பெண்கள் நூற்றுக்கு இரண்டு பேர்கள் மாத்திரம் இருக்கும் இந்த நிலைமையில் ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் வாசிக்கும் பெண் குழந்தைகளுடைய சம்பளத்தை அதிகரித்திருப்பது கல்வி அபிவிர்த்திக்கும் தேச முன்னேற்றத்திற்கும் பாதகமாயிருப்பதால் முன்னிருந்த அளவிற்கு மேற்படி சம்பளங்களைக் குறைக்கும்படி இம்மகாநாடு சென்னை கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்கிறது.

8. இதர வகுப்பைச் சேர்ந்த விஷமிகளாலும் போலீஸ் கீழ்தர உத்யோகஸ்தர்களாலும் இம்சிக்கப்பட்டு கஷ்ட நஷ்டங்களுக்குள்ளான செய்த்தலை நாடார்களுக்கு இம்மகாநாடு தனது அனுதாபத்தை தெரிவிக்கிறது.

9. நமது சங்கத்தின் சட்ட திட்டங்களின்படி பெரிய ஊர் சின்ன ஊர் என்ற வித்யாசமின்றி சகல ஊர் நாடார்களும் சங்கம் சம்பந்தப்பட்டமட்டில் சமத்துவம் என்றும் அவ்வித பேதாபேதங்கள் கான்பரன்ஸ் ரிப்போர்ட்டுகளில்காணப்பட்டால் அது சங்கத்தின் கொள்கைக்கு மாறுனதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

10. சிவகாசியிலும் விருதுநகரிலும் உள்ள நமது ஹைஸ்கூல்களை காலேஜ்களாக்கி நாடார் மாணவர்களுக்கு ஹாஸ்டல்கள் ஏற்படுத்துமாறு அவ்வூர் தலைவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

11. நாடார்கள் வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் பெண்பாடசாலை ஸ்தாபிக்க நம் தலைவர்கள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

12. நாடார் குலத்தினர் யாவரும் தவராது சங்கத்தின் அங்கத்தினராக வேண்டுமென்று இம்மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

வந்தனோப சாரத்துடன் இரண்டாம் நாள் மகாநாடு இனிது முடிந்து கலைந்தது.

மூன்றாம் நாள் நடவடிக்கை.

(மாலை 3-மணிக்கு ஆரம்பம்.)

(10—6—1925)

1. நம்மவர்கள் வீட்டுத்தொழிலாக நடத்தி வந்த கைராட்டில் நூல் நூற்றதை, மறுபடியும் கைக்கொள்ளுமாறும்; அந்நூல்கொண்டு நெய்த உடை அணியுமாறும், நம்மவர்களை இம்மஹாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

2. தூத்துக்குடியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் நமது நாடார் பாங்கை நம் குலத்தவர்கள் ஒவ்வொருவரும் தங்களால் இயன்ற அளவு பங்குகள் எடுத்தும், நம்மவர்களின் பொது ஸ்தாபனங்களிலுள்ள பணங்களை சாத்தியமானவரை பாங்கில் காண்ட் டிப்பாசிட்களாக (Fixed De-

posite) போட்டும் ஆதரிக்குமாறு இம்மஹாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

3. நமது குலத்தினர் சுதேச கைத்தொழில்களை ஆதரிக்கவேண்டுமென்றும் கூடுமானவரை அந்நியதேசத்து சாமான்களுக்குப் பதிலாக சுதேச சாமான்களை உபயோகிக்க வேண்டுமென்றும் இம்மஹாநாடு நமது பொதுஜனங்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. நமது சங்கத்தின் தீர்மானத்திற்கிணங்க் கள்ளிறக்கும் அனுச்சாரதொழிலை விட்டுவிலகி பதனீர் இறக்கி கருப்புக்கட்டி, சர்க்கரை முதலியன உண்டுபண்ணி மரியாதையாய் ஜீவனம் செய்ய விரும்பும் நாடார்களை ஆப்காரி கீழ் உத்தியோகஸ்தர்கள் இம்சிக்கா திருக்கும்படி செய்ய சென்னை கவர்ன்மெண்டாரையும் ஆப்காரி அதிகாரிகளையும் இம்மஹாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

5. தூத்துக்குடி தக்ஷணமார நாடார் மகமை பரிபாலன சங்கம் நிர்வாகிகள் தூத்துக்குடியிலிருக்கும் தக்ஷணமார நாடார்களின் பேட்டையை சொஸைட்டி ஆக்டின்படி ரிஜிஸ்டர்செய்து அதன் வரவு செலவுகளை பொது ஜனங்கள் அறிய வெளிப்படுத்தியிருப்பதுபற்றி இம்மஹாநாடு சந்தோஷமடைவதுடன் ஏனைய பேட்டைகளின் நிர்வாகிகளும் அவ்வாறு செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளுகிறது

6. சென்னை கவர்ன்மெண்டாரின் கலால் சம்மந்தமான கோப்பாடானது சன்மார்க்கத்திற்கு விரோதமானதாயிருப்பதால் அதை முற்றிலும் மாற்றி; லாகிரி வஸ்துகளின் விற்பனையை நாளுக்கு நாள் குறைத்து பத்து வருஷத்திற்குள் பூராவும் நிறுத்திவிட ஏற்பாடு செய்யும்படி இம்மஹாநாடு சட்டசபை மெம்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறது.

7. ஸ்தல ஸ்தாபனங்களில் நம்மவர்களுக்கு இப்போது போதுமான ஸ்தானங்களில்லாததால் இனிவரும் எலக்ஷன்களில் ஒவ்வொருவிடத்திலும் நமது குல அபேக்ஷகர்கள் முன்வந்து அதிகமான ஸ்தானங்களை கைப்பற்றுவதற்கு அவசியமான முயற்சி எடுக்கவேண்டுமென்றும், சிறுபான்மையோர் உள்ள இடங்களில் நாமினேஷனில் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும் இம்மஹாநாடு தீர்மானிக்கிறது.

(8) ஐந்து வயது முதல் 15-வயது வரையுள்ள நம்குல சிறுவர்களை கட்டாயம் கட்டாயப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதற்கு ஏதுவாக பள்ளிக்கூடமில்லாத ஒவ்வொரு ஊரிலும் பிரதமப் பாடசாலைகளை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யும்படி தலைவர்களை இம் மஹாநாடு கேட்டுக்கொள்கிறது.

(9) நாடார்கள் வசிக்கும் கிராமங்கள் தோறும் நமது குலாபிவிருத்திக்கு ஏதுவாக கிளைச் சபைகளையும், வாசக சாலைகளையும் ஸ்தாபிக்க வேண்டுமென்று இம் மஹாநாடு தீர்மானிக்கிறது.

(10) வருஷத்துக்கு வருஷம் அதிகமான ஸ்காலர்ஷிப் விண்ணப்பங்கள் வந்துகொண்டிருப்பதாலும், சங்கம் பண்டிலிருந்து கொடுக்கப்படும் ஸ்காலர்ஷிப்புகள் எல்லோருக்கும் கொடுக்கப் போதாதாகையாலும் தயாள குணம் நிறைந்த குலாபிமானிகள் சங்கத்தின் மூலம் தங்கள் பெயரால் ஸ்பெஷல் ஸ்காலர்ஷிப்கள் கொடுக்கும்படி இம் மஹாநாடு கேட்டுக் கொள்கிறது.

(11) சிவகாசி, விருதுநகர், அருப்புக்கோட்டை, பாலையம்பட்டி, திருமங்கலம், சாத்தன்குடி முதலிய ஊர்களில் தலைக்கட்டுவரி சரியாய் வருலாகாதிருப்பது கிராமங்களில் வரி வசூல் செய்வதற்கு தடையாயிருப்பதால் அவ்வூரிலுள்ள தலைவர்கள் சீக்கிரத்தில் தலைக்கட்டுவரி வசூல் செய்தனுப்பும்படி இம் மஹாநாடு கேட்டுக் கொள்கிறது.

(12) நம் குலத்தினர்களை பங்காளிகளாகச் சேர்த்து "ஜாயிண்ட் ஸ்டாக்" கம்பெனிகளை ஸ்தாபித்து புகிதான தொழில்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும்படி இம் மஹாநா நமது குல வர்த்தகப் பிரபுக்களை கேட்டு கொள்ளுகிறது.

(13) நமது வகுப்பினர் கைத்தொழில்களில் அபிவிருத்தியடைவதற் கேதுவாக முக்கியமான ஊர்களில் கைத்தொழில் பாடசாலைகளை

ஸ்தாபித்து அவைகளில் நம்குல சிறுவர் சிறுமிகளைப் பயிற்றுவது அவசியமென்று இம் மஹாநாடு அபிப்பிராயப் படுகிறது.

(14) சங்கத்தின் தீர்மானத்திற் கிணங்க நமது குலத்துக் குரிய தல்லாதகள் இறக்குதல் கள் விற்றல், முதலிய அனுச்சார தொழில்களை விட்டுவிட்டு வேறு தொழில்களில்லாமல் கஷ்டப்படும் நாடார்களுக்கு முக்கிய ஊர்களிலுள்ளநாடார்குல கனவான்கள் ஜீவனந்துக்கு வேண்டிய வழிகளைக்காட்டி ஆதரிக்கும்படி இம் மஹாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

(15) நாடார் குலத்தவர்களுக்காக “மதறுஸ் கிறிஸ்டியன் பெனிபிட் பண்டு” போன்ற ஒரு இன்சூரென்ஸ் பண்டை சங்கத்தின் சார்பில் ஸ்தாபிக்கவேண்டுமென்று இம் மஹாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(16) நமது ஜாதியார்களில் பலவான்களானவர்கள் இந்தியா கவர்மெண்டார் ஏற்படுத்தியிருக்கிற தேசப் பாதுகாப்பு படையில் சேர்ந்து நமது ஜாதியின் வீரத்தையும், தருமத்தையும் நிலைநாட்ட வேண்டுமென்று இம் மஹாநாடு தீர்மானிக்கிறது.

(17) ஸேண்ட்ஹர்ஸ்ட் (Sandhurst) ராணுவ காலேஜுக்கு வருடாவருடம் மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் நாடார் குலத்தவரில் குறைந்தபக்ஷம் இரண்டு மாணவர்களையேனும் தெரிந்தெடுக்குமாறு இம் மஹாநாடு கவர்ன்மெண்டாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

(18) அக்கிராசனரின் முடிவுரை பெற்று, வந்தனோபசாரத்துடன் கான்பரன்ஸ் இனிது முடிந்தது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

வேண்டுகோள்.

வடக்கன்குளம் நாடார் நன்மக்கள் கவனத்திற்கு.

அன்பின் சகோதரர்காள்,

சென்ற சில ஆண்டுகளாக நமது மகாஜனசங்கத்தின் பெரும் முயற்சியால் நம்மவர்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு ஒருவாறு ஆசார சீர்திருத்தம் மிகுதிபெற்றிருப்பது யாவரும் அறிந்ததே. ஆங்காங்கு நம்மவர் மதுக்கடை எலமெடுப்பதும் நிறுத்தப்பட்டு வருகிறது. ஆனால் சில கிராமத்தவர் பழய பல்லவியையே யின்னும் பாடி வருகின்றனர். நிற்க நமது குலக் கட்டுப்பாட்டை அங்கீகாரஞ் செய்து நம்மவரில் சில பிரபுக்கள் இவ்வருடந் தொட்டு மதுக் கடைகளைக் குத்தகைக்கு எடுப்பதில்லையென்றும் அதற்குரிய தொழில் செய்வதில்லையென்றும் ஒவ்வொருவரும் தம்மில் தாமே கட்டுப்பாடுடனிருந்து வருவதாயறிகிறோம். குணசீலர்காள். இந்த நல்ல செய்கையை கடைப்பிடிக்கும் ஒவ்வொரு கனவான்களுக்கும் எங்கள் வந்தன முரியதாகும்.

க்ஷத்திரிய உத்தமர்காள் நம்மவரிற் சிலர் கால மாறுபாட்டால் கையாண்டுவந்த இவ்வினத்தொழிலை தீர புருஷர்கள் ஒதுக்கித் தள்ளுமிக்காலத்தில் நாம் கைவிட்ட பங்கை பழிபேசிய சில வேறு குலத்தவர் நிர்வகிக்கப் போவதாய் வதந்தி உலாவுகிறது. இதைவிட்டு எக் குலத்தவர் எவ்வாறு நடப்பினும் சரியே.

திடசித்த வைராக்கிய வீரர்காள் மனிதவர்க்கத்தின் ஆன்மாவையும், அறிவையும், ஆண்மையையும் மழுங்கச் செய்வதும் நமது நாட்டைப் பாழ்படுத்தி ஒற்றுமையை குலைத்து தரித்திரத்துக்குள்ளாக்கக் கூடியதும், கலால் கீழ்தர உத்தியோகஸ்தர்களின் ஹிம்ஸைக்கு நமது சகோதரரை உரித்தாக்குவதுமான ஈனமதுத்தொழிலை அறவே ஒழித்துப் பூரணமாய் நமது குலம் வளர்ந்தோங்க ஈசன் கருணைபுரிவாராகவும்.

குலக் கட்டுப்பாட்டையே பெரிதெனவெண்ணும் குஞ்சரங்காள். நீங்கள் இந்த நல்ல கைங்கரியத்தைச் செய்ய பெரியோர் சிறியோரென்றவித்தியாசமின்றி அவரவரேதங்கள் தங்கள் கடனாற்றுமாறும் அவரவரே இச்செய்கையிலிருந்து தம்மைத் தாமே விலக்கிக் கொள்ளுமாறும் உங்களைப் பன்முறையும் வேண்டுகிறோம். ஈசன் நம்மத்தியில் சமாதானத்தையும் ஒற்றுமையையும் நிலவச் செய்வாராகவும். சுபம். இங்ஙனம்,

நிர்வாகிகள்,
வடக்கன்குளம் நாடார்,
ஐக்கிய சங்கம்,
கொழும்பு.

க்ஷத்திரிய மித்திரன் பத்திராதிபரின் அதிஷ்டம்.

நமது சந்தாதார்களில் ஒருவரும்; க்ஷத்திரிய மித்திரன் பேரில் பூரண அபிமான முள்ளவரும்; இரங்கூன், சவுத் இந்தியன் டிரேடிங் கம்பனியின் மானேஜரும் ஆகிய ஸ்ரீமான், N. T. வெள்ளைய நாடார் அவர்கள் பின்வருமாறு எமக்கு எழுதி அனுப்பினர்.

மகா-ா-ா-ஸ்ரீ பத்திராதிபர் அவர்கட்கு இந்த ரூபாய் அனுப்பிய விவரம்: கமுதி லாட்டரியில் ஒன்று போட்டேன் லாட்டரி விழுந்தால் நம் மித்திரனுக்குப் பேர்பாதி என்று நினைத்துப் போட்டேன். ரூ 5-விழுந்தது. கமிஷன் நீக்கி 4/14-அனுப்பினார்கள். 2/7-க்கு கமிஷன் நீக்கி ரூ 2/5-அனுப்பி யிருக்கிறபடியால் அன்புடன் பெற்றுக் கொள்ளும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன். N. T. வெள்ளையா நாடார்,

என வெழுதி ரூபா 2—5—0 அனுப்பியுள்ளார். வந்தனத்துடன் பெற்றுக் கொண்டேன். லாடரில் 100 ரூபாயாவது விழப்படாதா? எனது அதிஷ்டம் இதினுமா நிற்கவேண்டும்.

பத்திராதிபர்.

———(s)———

முக்கிய அறிவிப்பு.

ஸ்ரீவைகுண்டம்,
27—6—25.

தெக்ஷண மகாநாடு உறவின்முறை நாடார்கள் எல்லோருக்கும் இதனால் தெரியப்படுத்திக் கொள்வது என்னவென்றால்:—

நமது தெக்ஷண நாடார்களுக்குச் சம்பந்த முள்ளதாகப் பல இடங்களில் இருக்கிற பேட்டைகளின் நிர்வாக விஷயமாய் வேண்டும் ஏற்பாடுகளைச் செய்வதற்கு ஒரு மீற்றிங் கூட்ட வேண்டுமென்று நம் மதுரைப் பேட்டையில் 9—6—25 ல் கூடிய உறவின்முறைகள் செய்த தீர்மானப்படி 3—8—25 (1100-ம் ஆண்டு ஆடி மீ 19உ) திங்கள்கிழமை பகல் 3-மணிக்கு விருதுநகரில் இருக்கிற நமது பேட்டையில் கூடுகிற மீற்றிங்கிக்கு எல்லாரும் வரக்கேட்டுக் கொள்கிறேன். இங்ஙனம்,

S. S. ஆதித்த நாடார்,
காயாமொழி.

கடவுளை அடையும் மார்க்கம்.

தியானமன்றி, ஞானமில்லை. யோகமில்லாதவனுக்கு தியானமில்லை. தீர்த்தமாவது, தபசாவது, யஜ்ஞமாவது தியானத்திற்கு சமானமாக மாட்டாது. ஆகையால் தியானத்தை செய் என்று சொல்லப்பட் டிருப்பதால், தியானம் சொல்லப்பட்ட காரணத்தாலேயே ஞானமும் சித்திக்கிறது. தியானமின்றி ஞானமில்லை; யோகமில்லாதவனுக்கு தியானமில்லை என்றதனால் தியானத்திற்கு முந்தி யோகம் அவசியமாதலால், யோகம் அதாவது சேர்க்கை யென்ற தாத்பர்யத்தை விளக்குகிற "மயி ஆவேசித சேதஸாம்" என்ற பதத்தைப் பிரயோகித்தார். ஆகையா மனித ஈசுவரனை யடைய முக்கிய சாதனமான மூன்று யாகங்களாகிய கர்மம் பக்தி, ஞானம் ஆகிய இவைகள் ஸ்தூலமாய்ப் பார்க்குமிடத்துப் பிரத்தியேகமான மூன்று மார்க்கங்களாகக் காணப்பட்டாலும், சாராம்சத்தில் ஒன்று மற்றொன்றுக்குத் துணைக் கருவியாயும், ஒன்றை அனுஷ்டிப்பதால் மற்றொன்று ஜனிதமாகக் கூடியதாயு மிருக்கிறது என்பது நன்கு விளங்கும். அவைகள் எப்படி ஒன்று மற்றொன்றுக்கு சாதன மென்பதையும், அனுஷ்டிக்க வேண்டிய வழிகளையும் ஒன்றின் பின் ஒன்றாய்ச் சற்று விசாரிப்போம். (1) கர்மயோகம்—கர்மயோக மென்றால் சாஸ்திரோக்தமாய் அந்தந்த வருணாசிரமங்களுக்கு விதிக்

கப்பட்டதாயும், பூர்வ கர்மவாசனையால் ஒருவன் செய்ய வேண்டியதாயும் ஏற்பட்டிருக்கிற கர்மங்களை பகவத்கீதை, 12-வது அத்தியாயம், 6-வது சுலோகம்:

“யேது சர்வாணி கர்மாணி மயிசன்னி யஸ்ய மத்பரா: அநந்நியே நைவயோகேன மாம்தியாயந்த உபாஸதே.”

7-வது (சுலோகம்) “தேஷாமஹம்சமுத்தர்த்தா, மிர்த்திபு ஸம்சார சாகரத், பவாமி நசிராத் பார்த்த, மய்யா வேசித சேதசாம்” (அதாவது) எவர்கள் சகல கர்மங்களையும் என்னிடத்தில் சமர்ப்பித்து என்னைச் சரணமடைந்தவர்களாய் ஒரேவிதமாயிருக்கிற பக்தியோகத்தினாலே என்னை தியானம் செய்துகொண்டு உபாசிக்கிறார்களோ, என்னிடத்தில் வைக்கப்பட்ட மனதை யுடைத்தான அவர்களை ஓ அர்ச்சுனா! மிருத்தியுவாகிய சமுசார சாகரத்திலிருந்து சீக்கிரமாக நான் கரையேற்றுகிறேன்” என்றார். அதாவது (1) நாம் கர்மத்தை செய்யவேண்டுமென்றும், அப்படிக் கர்மஞ் செய்வதிலும் பகவானுக்கு அர்ப்பணமாய் செய்துவிட வேண்டுமென்றும், அப்படி செய்துவரப் பழகப்பழக (2) பக்தியானது ஜனிக்குமென்றும், அப்படி ஜனித்த பக்தியானது ஆரம்பத்தில் சலனத்தை யடையுமாதலால், அப்படிக்கின்றியில் ஒரேவிதமாய் மாறாத பக்தி வேண்டுமென்றும், அந்த பக்தி வந்தவுடன் மாத்திரம் திருப்தியாயிராது, (3) பகவானை தியானஞ் செய்துகொண்டு உபாசிக்க வேண்டுமென்றும் ஆகவே, சாராம்சமாய் (1) ஈசுவரார்ப்பண புத்திருபகமான கர்மம், (2) பக்தி, (3) தியானம் மூன்றையு மனுஷ்டித்து முறைப்படி செய்வதால் பரமாத்மாவிடம் தனது மனது, புத்தியாவத்தும் ஒன்றுபடும்படி செய்தல். அக்கர்மாக்கள் சாஸ்திரோக்தமாய் விதிக்கப்பட்டதாயிருந்தாலும்சரி, தனக்கோ அல்லது தன்னை அண்டினவர்களுக்கோ அல்லது தனது நாட்டிற்கு எதற்கு செய்யவேண்டியிருந்தாலும் சரி அதை கவனித்துச் செய்தல் வேண்டும். நாம் ஒவ்வொருவரும் பிரதிதினமும் மனோ வாக்கு காயங்களால் எவ்வளவோ கர்மாக்களை செய்கிறோம். அவைகளைப் புண்ணிய கர்மாவாயிருந்தால் தனக்கும் தன்னை அண்டினவர்களுக்கும் நன்மையும், பாபகர்மாவாயிருந்தால் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் தீமையும் மிஸ்ர கர்மாவாயிருந்தால் நன்மை தீமையாகிய இரண்டு பலன்களையும் கலந்தும் நமக்கு இகத்திலும், பரத்திலும் கொடுக்கிறதென்பது சுருதிகளாலும், அனுமானத்தாலும், அனுபவத்தாலும் தெரிய வரும். அப்பேர்ப்பட்ட கர்மாக்களின் பலனாக உயர்ந்த தேவாதி ஜன்மங்களையோ, அல்லது தாழ்ந்த ஜன்மங்களையோ, அல்லது மனுஷிய ஜன்மங்களையோ அடைகிறோம். அப்படி அடிக்கடி ஜன்மங்களை எடுத்து ஒவ்வொரு ஜன்மத்திலும் பின்னும் எவ்வளவோ கர்மாக்களை செய்து ஜன்மங்களை விர்த்தி பண்ணிக் கொள்கிறோம். கர்மாவைச் செய்தாலல்லவோ இவ்வளவு துன்பம்? கர்மாவை செய்யாமலிருப்போமென்றால், நாம் ஒருபோதும் அப்படியிருக்க முடியாதென்பது சித்தம். ஏனென்றால் பசித்தால் ஆகாரம் செய்யாமலிருக்கக் கூடாதென்றும், ஆனால் கர்மம் செய்வதில் பலனை மாத்திரம் அபேக்ஷிக்கக் கூடாதென்றும் தெரியவருகிறது. ஏனென்றால் மூன்று வேதங்களையும் அறிந்து எக்கியங்களில் பகவானை பஜிக்கிறவர்களாகி சோமபானத்தைச் செய்து பாவமற்றவர்களாய் சுவர்க்க லோகத்தை அபேக்ஷித்து தேவேந்திர லோகத்தை அடைந்து உத்தம சுகங்களை அனுபவிக்கப்பட்டவர்களும் கூட புண்ணியம் நசித்தவுடன் மனுஷிய லோகத்தில் பிறப்பை அடைகிறார்களென்று கீதையின் 9-ம் அத்தியாயம் 20, 21 சுலோகங்களினாலும் தெரியவருகிறது. ஆகையால்தான் “மாபலேஷு கதாசன” பலனில் ஒருபோதும் இச்சிக்காதே என்று வற்புறுத்தியது. எப்போது பலனை அபேக்ஷிக்காமல் செய்ய எத்தனிக்கிறானோ அப்போது நிஷ்காமிய புத்தி வந்துவிடுகிறது. நிஷ்காமிய புத்தி வந்தவுடன் பூ, புவர், சுவர்லோகங்களில் இவன் ஜனன மரணத்தை யடைகிறதில்லை.

(இன்னும் வரும்.)

96 வித நேத்திர வியாதிகளுக்கு, களாகாதைலம்.

1-புட்டி தபால் கூலியுள்பட 1—6—0 3-புட்டி தபால் கூலியுள்பட 3—0—0

இது பி. எஸ். ஜெகத்குரு அவர்களால் கண்டுபிடித்த ஓர் நேத்திர சஞ்சீவிமூலிகை. அந்தமூலிகையால் இந்த தைலம் இரக்கப்பட்டது. சாதாரணமாய் நம் வழக்கம் பிரகாரம் நெல்லண்ணெயில், 30 துளி இந்த களாகா தைலத்தை விட்டு கலக்கி, தலையிற் தேய்த்துக்கொண்டு 5 நிமிஷம் வரையில் தலையிற் தைலம் ஊரிய பிறகு சிக்காய் அல்லது அரப்பை கொண்டு தேய்த்து ஸ்னானம் செய்யவும். இப்படி வாரத்திற்கு இரண்டு ஸ்நாணம் செய்து வந்தால் அடியிற் கண்ட வியாதிகளை சௌக்கியப்படுத்தும். இந்த தைலத்தை அநேகர் உபயோகித்து இதன் சிறந்த குணத்தைப்பற்றி சந்தோஷப்பட்டு மாதம் மாதம் வாங்கி உபயோகிக்கிறார்கள் சொற்பவிலைதான் யாதொரு பத்தியமில்லை.

(தீரும் வியாதிகள்.)

1. கண்கள் குளிர்ச்சியாயிருக்கும். 2 உஷ்ணத்தினலாவது சீதளத்தினலாவது உண்டாகும் ஜலுப்பு. 3மார்சளி. 4 நீர்கோர்ச்சுடு. 5தாய்ரையினல் உண்டாகும்ச்சளி 6 சிரசிலுண்டாகும்தினவு. 7 காரகத்தினலாவது, மயிர் உதருகிறது. 8 பித்தத்தினல் தலையெரிவந்தம். 9 உஷ்ணத்தினல் யெரிவந்தம். 10 பித்தத்தினல் தலை சுற்றுகிறது .11 கைகால் எரிவந்தம். 12 உடம்பெல்லாம் யெரிச்சல். 13 திரேகம் பளுவாயிருத்தல் 14 கண்கள் எரிச்சல். 15 கண்ணேய். 16 கண்ணில் தண்ணீர் வடிதல். 17 கண் மஞ்சளாயிருப்பது. 18 கண்ணில்.நமைச்சல். 19 பித்த நீரினல் கண் சாலேஸ்வரம். 20 எப்போதும் கண் எரிச்சல். 21 கண்ணின் ஓரத்தில் வரும் கட்டிகள். 22 முடக்கு கீல்கள் வியாதி. 23 பசிதீபனை எடுக்கும். 24 உடம்பிற்கு அழகையும், முகத்திற்கு வசீகரமும் கொடுக்கும். 25 வெள்ளைமயிர் கருத்துவிடும்.

ஆயிரமேன்! அய்யா கோபத்தால் வரும் 45 வியாதிகளும், பித்த கோபத்தினல் இமையோரத்தில் உண்டாகும் 16 வியாதிகளும், சிதசோபத்தினல் வெள்ளை விழியில் வரும் 20 வியாதிகளும், கடைக்கண்ணிலுண்டாகும் 15 வியாதியும், ஆக 96 வியாதிகளும் பஞ்சாய் பறந்துவிடும். இந்த தைலத்தை சதா உபயோகிப்பதினல் இன்னொரு அனுகூலமானது நன்றாய் நித்திரைவரும். சிலருக்கு இரவில் நித்திரைபிடிக்காமல் எந்நேரமும் விழித்துக்கொண்டிருக்கிறது. இதினல் அது நீங்கிவிடும். இதை ஸ்னானம் பண்ணுவதினல் கண்ணாடியென்ற நாமதேயமில்லாமல் அவ்வளவு நன்றாய் கண்கள் தெரியும். இது எந்த தொத்து வியாதியையும் சேர்க்காது. 10 ஸ்நானத்திற்குவரும். 6 புட்டி வாங்கினல் 1-புட்டி இனம். 6-புட்டி 5—8—0

சிவனூர் அமிர்த சூரணம்.

1 டப்பி தபால் கூலியுள்பட 1—6—0

3 டப்பி தபால் கூலியுள்பட 3—0—0

இந்த சூரணம் பல சித்த மூலிகைகளால் செய்தது இதில் ½ ரூபாய் இடை எடுத்து கொஞ்சம் சீனி சர்க்கரை கலந்து வாயில்போட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும், இவ்விதமாக காலை மாலை இரண்டு வேளையும் சாப்பிட்டால் அடியிற்கண்ட வியாதிகளை எல்லாம் கண்டிக்கும், யாதொரு பத்தியமில்லை.

நமது தேகத்தில் பித்தம் அதிகரிப்பதால் ஏற்படும், தலை மயக்கம் வாய் குமட்டல், வாந்தி, தலை பாரம், கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கபாலம் எரிச்சல, நெஞ்சில் கபம் கட்டுதல் வாயில் நீர் சுரப்பு மார்நோய். மார் எரிச்சல் கைகால் குடைச்சல் எரிச்சல் மலச்சிக்கல், பித்தவாயுவு. பித்த சூடு, பித்த காரிகம் பித்த உஷ்ணம், பித்த பாண்டு, பித்த குன்மம், பித்த மகோதரம், பித்த சீதளம், பித்த காமாலை, பித்த வெட்டை ரத்த பித்தம், நீர் பித்தம், சிற்பித்தம், ஆம்ல பித்தம், கருத்த க்ஷீண பித்தம், முதலிய 41 விதமான பித்தவியாதிகளை எல்லாம் கண்டிக்கும் கைகண்ட மருந்து நம்பிக்கையானது. மேற்கொண்ட வியாதியுள்ளவர்கள் இந்த சூரணத்தை சாப்பிட்டு வந்தால் ஒரு வாரத்தில் இந்த வியாதிகளை எல்லாம் கண்டிக்கும். வியாதி இல்லாதவர்கள் இதை தினந்தோரும் சாப்பிட்டு வந்தால் தாது விர்த்தி அதிகரிக்கும் பித்த வியாதிகளை அணுகவொட்டாது.

சூதகபந்த நிவாரணி.

புட்டி 1-க்கு தபால் கூலியுள்பட விலை ரூ. 1—4—0

புட்டி 3-க்கு தபால் கூலியுள்பட 2—12—0

பெண்களுக்கு பிரதிமாதமும் வரவேண்டிய சூதகம் சரியாய் வாராமையால், அதனல் உண்டாகும் வயற்றுவலி, திரேக ஊதல், கைகால் ஊதல், கையால் குத்தல்குடைச்சல், தலைநோய், கழுத்துநோய் இடுப்பு நோய் முதலான சூதகத்தாலுண்டாகும் அநேகமான வியாதிகள் எத்தனைவருஷமாயிருந்தாலும் 3 அல்லது 4-தினத்தில் போக்கடித்து வெகு சந்தோஷத்தையனுபவிக்கலாம். பிள்ளையில்லா மலடுபெற்றிய பெண்கள் ஒரே முறையாக ஏழுநாள் சாப்பிட்டால் தப்பாமல் புத்திரபாக்கியமுண்டாகும் மிகவும் அனுபவமான மருந்து.

வேண்டியவர்கள் அடியிற் கண்ட எமது விலாசத்துக்கு கடிதம் எழுதவும்.

☞ எமது விலாசம்:—

பி. எஸ். ஜெகத்குரு இராஜ வைத்திய நிலயம்,

நெ 22, பூதபெருமாள் முதலி தெருவு,

மவுண்ட் ரோட்டு போஸ்ட், மதராஸ்.